பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

★ காஞ்சிபுரம்
★ பெனறிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்.
மற்றும் சகலவிதமான
பினவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்
**ராசி சில்க்ஸ்**
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/.

மங்கள ... வங்களுக்
கேற்ப, உடு... டைவைகள்
RASI
**ராசி சில்க்ஸ்**
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஞூ புரட்டாதி மீ 28 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1049 ற அவ்வல் பிறை 02 (14 - 10 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 209

# படைகள் - கிளர்ச்சியாளர் மாத்தறையில் மோதல்

## பொலீசாருக்குபாண்கொடுத்த பேக்கரியும் தீக்கிரையானது

கொழும்பு, அக்டோபர் 14

தென்மாகாணத்தின் பிரதான நகரமான மாத்தறையில் தொடர்ந்து வன்செயல்கள் நடந்து வருகின்றன. கடந்த புதன்கிழமை ஊரடங்கு நேரத்தில் கிளர்ச்சிக்காரர்களுக்கும் படையினருக்கும் இடையில் நடந்த கடும் மோதலில் 36 பேர் பலத்த காயமடைந்தனர். அவர்களில் பலரது நிலை ஆபத்தாக இருந்ததாக இங்கு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக கொழும்பில் இருந்து அவசர அவசரமாக இரத்தம் விமான மூலம் மாத்தறைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

காயமடைந்தவர்களில் பலர் கிளர்ச்சிக்காரர்கள் என்றும் அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காகக் காலி ஆஸ்பத்திரியிலிருந்து டாக்டர்கள், தாதிகள் விசேடமாக அனுப்பப்பட்டனர் என்றும் அறியவந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமையும், ஊரடங்கை மீறிக் கிளர்ச்சிக்காரர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததைத் தொடர்ந்து படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 15 பேர் மரணமானதும், 30 பேர் காயமுற்றதும் தெரிந்ததே.

இதேவேளை பொலீஸாருக்குப் பாண் வழங்கியதாகக் குற்றஞ்சாட்டி, பாண் உற்பத்தி ஆலை (பேக்கரி) ஒன்றை தீவிரவாதக் குழுவினர் நேற்றுத் தீக்கிரையாக்கினர்.

ஹர்த்தால் தினத்தில் கடையைத் திறந்து வைத்திருந்த சில கடைகளும் தீவிரவாதிகளால் தீக்கிரையாக்கப்பட்டதாக அறியவந்தது. (அ-ஐ-9)

முச்சந்தி முரளி



பேக்கரிக்காரர்கள், கடைக்காரர்களுக்கு தெற்கில் பெரிய தலையிடி வந்திருக்குது எண்டு சொல்லுங்கோ... இரு தலைக் கொள்ளி எறும்பாகிவிட்டினம் அவை!

## வரவு-செலவுத்திட்டம் இம்முறை இல்லை

கொழும்பு, அக். 14

புதிய வரவு செலவுத் திட்டம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இத்தகவலை நிதி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பிரபாத் மானவசிங்க தெரிவித்தார்.

இடைக்கால அறிக்கை ஒன்றே இம்மாதம் 25 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் — அது பற்றி குறுகிய விவாதம் ஒன்று இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

இடைக்கால அறிக்கையின் செலவீனம் மட்டுமே இடம் பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது

புதிய வரவு செலவுத் திட்டத்தை முன்னர் திட்டமிட்டபடி இம்மாதம் நாடாளுமன்றத்தில்சமர்ப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டதற்குக் காரணம், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வரவு செலவுத் திட்ட விவாதத்தை நடத்தி முடிக்க முடியாது என்பதால் என்று தெரிவிக்கப்பட்டது. (அ- எ)

## சகல பாடசாலைகளும் 24 ஆம் திகதிவரை மூடப்பட்டிருக்கும் என அறிவிப்பு

கொழும்பு. அக். 14

நாட்டின் சகல பாடசாலைகளும் இம்மாதம் 25ஆம் திகதியே மீண்டும் திறக்கப்படும்.

அதுவரை அவை மூடப்பட்டிருக்கும் என்று நேற்று கல்வி அமைச்சு அறிவித்தது.

இதனிடையில் விசேட மாநாடு ஒன்றுக்குஇன்று கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருக்கிறார்.

பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி மாவட்ட பிரதம கல்வி அதிகாரிகள்ஆகியோரை இம்மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்று கல்வி அமைச்சர் பணித்து இருக்கிறார்.

இம்மாநாட்டுக்கு அமைச்சர் தலைமை வகிப்பார்.

எதிர்வரும் 24ஆம் திகதிவரை மூடப்பட்டிருக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை சுமார் 9 ஆயிரத்து 500 என்று தெரிவிக்கப்படுகிறது. (அ-எ)

## அரச ஊழியர் லீவு: புதிய கட்டுப்பாடுகள்

கொழும்பு, அக்.14

இரண்டு தினங்களுக்கு மேல் விடுமுறையில் செல்லும் அரச ஊழியர்கள், அரச வைத்திய அதிகாரி அல்லது அரச ஆயுள்வேத வைத்தியரிடமிருந்து பெற்ற வைத்திய அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும் தனியார் வைத்திய அதிகாரிகளின் சான்றிதழ்களை அவர்கள் சமர்ப்பிக்க முடியாது. பொது நிர்வாகத்துறை அமைச்சு அனுப்பியுள்ள சுற்று நிருபம் ஒன்றில் இத் (6 ம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

14 - 10 - 1988
புரட்டாதி - 28
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:-
06-02முதல் 07-32வரை
ராகுகாலம்:-
10-32முதல் 12-02வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
சதுர்த்தி விரதம்

## தபால் விநியோகம் இன்று ஆரம்பமாகலாம்

யாழ்ப்பாணம், அக். 14

வெளியூர்த் தபால்கள் இன்று முதல் யாழ்-குடாநாடு எங்கும் விநியோகிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 8 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை யாழ் தபாலகம் மூடப்பட்டதன் காரணமாக தபால் விநியோகங்கள் நடைபெறவில்லை.

எனினும் நேற்று வவுனியாவில் இருந்து இருநூறுக்கும் மேற்பட்ட தபால் பொதிகள் யாழ் தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டன.

இவற்றை தரம் பிரிக்கும் பணியில் தபாலக ஊழியர்கள் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

இன்று சகல பகுதிகளுக்குமான வெளியூர்த் தபால் விநியோகம் நடைபெறும் என தபாலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் தேங்கிக் கிடந்த பல தபால் பொதிகளும் நேற்று கொழும்புக்கு அனுப்பப்பட்டன.

## மீன் பிடிக்க பாஸ் தேவை

தாளையடி, அக் 14

வடமராட்சி கிழக்கில் 'பாஸ்' இல்லாமல் பகல் நேரங்களில் மீன் பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

'பாஸ்' வழங்குவதற்கான விண்ணப்பப் பத்திரங்கள் அமைதிப் படையினரால் விநியோகிக்கப்பட்டுள்ளன. (அ-144)

## வடமராட்சி ஊரடங்கு நேற்று நீக்கப்பட்டது

வடமராட்சி, அக். 14

வடமராட்சிப் பகுதியில் இரண்டு நாட்கள் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்ட உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச்சட்டம் நேற்று நண்பகல் 2 மணியுடன் விலக்கிக் கொள்ளப்பட்டது

கடந்த புதன்கிழமை காலையில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தையடுத்து கரவெட்டி, திக்கம் ஆகிய பகுதிகளில் அமைதிப் படையினர் பலத்த தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

தேடுதலின்போது பலர் விசாரணைக்காக முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஊரடங்கு காரணமாக வடமராட்சிக்கான சகல போக்குவரத்து தொடர்புகளும் நேற்று நண்பகல்வரை துண்டிக்கப்பட்டிருந்தன.

யாழ்-நகரிலிருந்து அச்சுவேலி வரை மட்டுமே பஸ்கள் சேவையில் ஈடுபட்டனவாயினும் ஊரடங்கு விலக்கப்பட்டபின்னர் நண்பகலுக்கும் பின்னர் பருத்தித்துறை வரைக்கும் ஒருசில பஸ்கள் சேவையில் ஈடுபட்டன.

முகாம்களில் தடுத்து வைக்கப்பட்ட பலர் பின்னர் விடுவிக்கப்பட்டனர். (அ-160-10)

## கடற்படையினர் திடீர்த் தாக்குதல்

காரைநகர் துறைமுகத்திலிருந்து ஊர்காவற்றுறை சென்றவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் விசாரணை எதுவுமின்றித் தாக்கப்பட்டனர்.

வடமத்திய மாகாணத்தில் நடந்த சிங்களக் கிராமவாசிகளின் கொலைச் சம்பவத்தைக் குறிப்பிட்டுக் கூறியே பயணிகள் தாக்கப்பட்டனர் எனச் சொல்லப்படுகிறது.

கடலுக்குச் சென்ற மீனவர்களும் பயமுறுத்தப்பட்டனர் எனச் சொல்லப்பட்டது. (அ-73)

## கூட்டணித் தலைவர்கள் இந்தியா திரும்பினர்

கொழும்பு. அக்.14

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் நேற்று முன்தினம் (புதன்கிழமை) இந்தியா திரும்பினர்.

வடக்கு - கிழக்கு மாகாண சபைகள் தேர்தல் சம்பந்தமாக விரிவான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் பொருட்டு அவர்கள் கடந்த மாதம் இலங்கை வந்திருந்தனர்.

அவர்கள் கொழும்பில் தங்கி இருந்தபோது ஜனாதிபதி உட்பட எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா மற்றும் அரசியல் தலைவர்கள் ஆகியோருடனும் சில தமிழ் போராளி இயக்கங்களுடனும் வடக்கு-கிழக்கு மாகாண சபை தொடர்பாக விரிவான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர்

இந்தியா திரும்பும் முன்னர் அவர்கள் இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றையும் சந்தித்தனர்.

இதேவேளையில் இந்தியத் தூதுவர் திரு ஜே. என். டிக்ஸிற் விரைவில் புதுடில்லி பயணமாவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளிலுள்ள பாதுகாப்பு நிலைமைகள், மாகாண சபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமைகள், வடக்கு-கிழக்கு மக்களின் மனநிலை மற்றும் கிழக்கு (6 ம் பக்கம் பார்க்க)

## நடேஸ்வராக் கல்லூரி மாணவர்கள் மறியல்

காங்கேசன்துறை, அக்.14

இந்திய அமைதிப் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மாணவர்களை விடுதலை செய்யக் கோரி கடந்த புதன் கிழமை கல்லூரி மாணவ மாணவிகள் கல்லூரி முன்பாக வீதியில் மறியல் போராட்டம் நடத்தினர்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மாணவர்களான கே. குணாளன், எஸ் சுகுணஜெகன் ஆகியோர் அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை உடனடியாக விடுதலை செய்யக் கோரி கல்லூரி மாணவ, மாணவிகள் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் கல்லூரி முன்பாக கல்லூரி வீதியை மறித்து மறியல் செய்தனர்.

கல்லூரி வீதிச்சந்தியில் [6ம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### தேடுதல் தீவிரம்

ஒட்டுசுட்டான் அக் 14

முத்து ஐயன் கட்டு மன்னகண்டல், கூளாமுறிப்பு ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களில் முகாமிட்டிருக்கும் இந்தியப் படையினர் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

தேடுதல் வேட்டைக்கு வரும் பொழுது தங்களுடன் தலையாட்டி ஒருவரையும் கூட்டிவருகின்றனர். (இ-113)

### 3ஆம் நாளாக

யாழ்ப்பாணம் அக் 14

கல்வியங்காட்டில் நேற்று மூன்றாவது நாளாக வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. (இ-10)

### மீண்டும் தூர இடங்களுக்கான பஸ் சேவை

யாழ்ப்பாணம், அக்.14

கொழும்பு மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய இடங்களுக்கான பஸ் சேவைகளை மீண்டும் இன்றுமுதல் வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஆரம்பிக்கிறது.

கடந்த சில நாட்களாக இப்பகுதிகளில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக போக்குவரத்துச் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன

...னும் மீண்டும் ... காலை 6 மணிக்கு ... பஸ்சேவைகளும் ...ரம்பிக்கப்படும் என வடபிராந்திய போக்குவரத்துச்சபை அறிவித்துள்ளது. (இ-10)

### மூன்று ஜவான்களே மரணம்

புதுடில்லி அக் 14

மாங்குளத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மறைந்து இருந்து தாக்கியதில் இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த மூன்று ஜவான்கள் உயிரிழந்தனர்.

போராளி ஒருவரும் உயிரிழந்தார் என்று புதுடில்லியில் தெரிவிக்கப்பட்டதாக இந்திய வானொலி நேற்றுத் தெரிவித்தது. (அ-எ)

### அரபு மொழி எழுத்தாளருக்கு நோபல் பரிசு

ஒஸ்லோ அக் 13

77 வயதான அரபு மொழி எழுத்தாளர் ஒருவருக்கு முதல் தடவையாக இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

எகிப்து நாட்டவரான இந்த எழுத்தாளரின் பெயர் நஜீப் கூப்.

இவர் அரபு மொழியில் மட்டுமே எழுதியிருந்தாலும் மனித நாகரிக வளர்ச்சிக்காகவே அவர் இலக்கியத் துறையைப் பயன் படுத்தினர் என்று நோபல் பரிசுக் கமிட்டி கூறியிருக்கிறது. (அ-எ)

## செய்திச் சாரம்

### பஸ் நிலையப் பகுதியில் சூட்டுச் சம்பவம்

யாழ்ப்பாணம், அக் 14

நேற்று பிற்பகல் 6 மணியளவில் யாழ் பஸ் நிலையப் பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் உலோகநாதன் (63 வயது) என் (6ஆம் பக்கம் பார்க்க)

### பல்கலைக்கழகம் மூடப்பட்டது

கொழும்பு, அக். 14

கொழும்பு பல்கலைக்கழகத்தை உடனடியாக மூடிவிடுவது என்று பல்கலைக்கழக செனட் நேற்று முடிவு செய்தது.

பல்கலைக்கழக வளவு மாணவருக்குத் தடை செய்யப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இன்று (வெள்ளி) நண்பகலின் சகல மாணவரையும் பல்கலைக்கழக வளவு விடுதிகளை விட்டு வெளியேறிவிடும்படி கழக செனட் மேலும் பணித்துள்ளது.

### சுட்டுக் கொலை!

தாளையடி, அக். 14

ஆழியவளையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் ஒருவர் மரணமானார்.

பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் முகாமையாளராக இருந்த தாளையடியைச் சேர்ந்த அன்ரன் என்பவரே சுட்டுக் கொலையுண்டவராவார். (அ-144)

### விறகு லொறிகள் தடுப்பு

தாளையடி அக் 14

ஆனையிறவு தடை முகாமில் விறகு ஏற்றி வந்த லொறிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன

அமைதிப் படையினரின் அனுமதிப் பத்திரம் இல்லாமல் விறகு ஏற்றி வந்த லொறிகளே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (அ-144)

### தஹா வீட்டில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, அக். 14

காலியில் அமைச்சர் தஹநாயக்காவின் வீட்டின் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

அதற்கு முன்னர் அவரின் வீட்டுக்கு அருகில் குண்டு ஒன்று வெடித்தது

துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் மீது பாதுகாப்புப்படையினர் திருப்பிச் சுட்டனர். ஆனால் சுட்டவர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

கடந்த ஞாயிறு இச் சம்பவம்இடம்பெற்றது. (அ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Honda Reconditioned புதிய பழைய Model C- 90. C- 70. C- 50. CD- 90 Lancer- 90. MB- 5 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு No. 16, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (A G A. அலுவலகம் முன்பாக). (7008)

திறி ஏக்கர் பாம் 15 நாள் நிரம்பிய Hyline வெள்ளை நிறப் பேட்டுக் கோழிக்குஞ்சுகள் கடந்த மாதம் 28 ஆம் திகதியிலிருந்து விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. பதிவு செய்தவர்களும், செய்யாதவர்களும் காலை 9 மணியிலிருந்து,4-30மணி வரையும் சுஜேராஸ் ஸ்தாபனம், இல. 21, வேம்படி றோட், யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். (C/575)

தரமான அலுமினியப் பாத்திரங்கள், பொங்கல் பானைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். பிள்ளையார், 259 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (7095)

உபயோகித்த வீட்டுத் தளபாடங்கள் Ceiling fan, Room Heater மகாராஜா ஹொல செற் T V Stand சன்ரைம் மேசை Kenwood Electric Cooker, O en சாப்பாட்டு மேசை, கதிரை. Office மேசை, மெஷின் கட்டில் மெத்தை Record-player கிளாஸ்வகை மற்றும் பலவித பொருள்களும் உடன் விற்பனைக்கு உண்டு. பழைய நம்:14/1 அம்மன் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம் (7010)

## திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C 357)

## கோழிக்குஞ்சு, தாராக் குஞ்சு விநியோகம

தாராக்குஞ்சு,பிறொயிலர் குஞ்சு சறுப்பு Hyline பேட்டுக் குஞ்சுகள் செறுப்பம் சனி 14-10-88 ல் விநியோகிக்கப்படும். A. J. சுப்பிரமணியம 45 கொழும்புத்துறை வீதி (சந்தானமாதா கோவில் அருகாமையில்)யாழ்ப்பாணம். லீலாபதி கண்டி றோட்மிருசுவில. 7011)

## தாரா, கோழிக்குஞ்சுகள்

பதிவு செய்தவர்களுக்கு 14ஆம்திகதி காரியாலயத்தில் தாரா, கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படும் அடுத்த விநியோகம 31ஆம் திகதி தொடர்ந்து மாதம இருமுறை விநியோகிக்க உள்ளோம் பெயர்களை பதிவு செய்யுங்கள். கால்நடை வளர்ப்போர் சங்கம், சுன்னாகம் கிளை (டயிர்ச்செய்கை உதவியாளர் அத்தாட்சி காரியாலயம், சுன்னாகம். (7016)

## தேவை

புகைப்படக் கலைஞர் திரைப்படச் சுருள்கள் (8' X 8') வைத்திருப்போர் எம்முடன் தொடர்பு கொள்ளவும் தேவன் எலைட் பிறைசஸ் இல. 5 நவீன சந்தை, சுன்னாகம். (7018)

## உடன் தேவை

சிலிண்டர் மெசின் மைண்டர் பக்கம் கட்டுபவர் PageMaker, அச்சுக்கோப்பாளர், உதவி ஆசிரியர்கள் எல்லாவர்களிலும் திருபர்கள் தேவை நேரில் வரவும். 'நம்நாடு' 192 K K S. வீதி, சுன்னாகம் (7202)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் சைவ வேளாள குடும்பத்தைச் சேர்ந்த பரணி நட்சத்திரமுடைய கனடாவில் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் 34 வயது வாலிபருக்கு கனடாவில் வசிக்கும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மணப்பெண் தேவை. சாதகக் குறிப்போடும், விபரங்களோடும் விண்ணப்பிக்கவும் வி கமலநாதன், 31/1, சங்கிலியன் வீதி, நல்லூர். (7013)

## வீடு தேவை

மாநகர சபை எல்லைக்குள் அல்லது அதை அண்டிய பகுதிகளுள் சகல வசதிகளுடன்கூடிய வீடு குறைந்தது மூன்று அறைகளுடன் தேவை. தொடர்பு விளம்பர இல 200 மே/பா உதயன் யாழ்ப்பாணம் (7022)

## சுஜேரா ரவல்ஸ்

மேற்கு ஜேர்மனிக்குச் (West Germany) செல்ல விரும்பும் 25 வயதிற்கு உட்பட்டவர்கள் தாமதியாது சுஜேராஸ் ஸ்தாபனம் No:21 வேம்படி றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (C/574)

## தவறிவிட்டது

தம்பு நல்லையா ஆகிய எனது (231881050-V) அடையாள அட்டை 10 10 88 இல் பெரியாஸ்பத்திரிக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.39, அம்பாள் வீதி, நாயன்மார்க்கட்டிலோ அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (7024)

7- 10- 88 அன்று எனது இரண்டு உறுதியும், சாலைவையும் தவறிவிட்டது. உறுதிகள் இரண்டும் பாட்டிசன் போடப்பட்டது. அவசியம் தேவைகருதியது தயவுசெய்து இதைக் கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் விலாசத்துக்கு அறிவிக்கவும். சி. சரவணமுத்து, பலாலி, வசாவிளான் போஸ்ற் Post (7203)

## சேவை

எங்களுடைய ஸ்தாபனம் இன்று தொடக்கம் மாலை 6 00 மணி வரை திறந்திருக்கும். யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ற், பிறைவேட் லிமிட்டட். முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் (7[illegible])

## அறிவித்தல்

திரு இலகுநாதன் [illegible] பட்ட இராமநாதன் கல்லூரி பவளவிழா நிதி சேகரிப்புப் பட்டியல் No. 11, தவறிவிட்டது கண்டெடுப்போர் பாடசாலைக்கு வழங்கவும் இதற்கு யாரும் பணம் கொடுக்க வேண்டாம் (7204)

## வீடியோ படப்பிடிப்பு

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள, அமங்கல நிகழ்ச்சிகளை 3 கமெராக்கள் பொருத்தி புதுமையான முறையில் வீடியோ படப்பிடிப்புச் செய்திட "பிரதீப் மூவிஸ்", புதுவீதி, கொய்யாத்தோட்டம், (கிளைகள் இல்லை) தொடர்புகட்கு:- 'துஸ்' (சுணில்). (6980)

## புத்தகம்

இந்து நாகரிகத்தில் கலைகள் G C. E. A/L, G. A. Q இராமநாதன் நுண்கலைப் பிரிவுத் தேர்வுகளுக்கு இன்றியமையாததோர் உதவி நூல்; ஆக்கியோன்: K M. செல்வரத்தினம் B A Hons. Dip in Hindu Civilization (முன்னாள் சமஸ்கிருத விரிவுரையாளர் அரசினர் ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி) கிடைக்குமிடம். பூபாலசிங்கம்& ஸ்ரீலங்கா புத்தகசாலை. (7086)

## கல்வி

### G. C. E. A/L - 1989

பௌதிகவியல் வகுப்புக்கள் ஆசிரியர் S. நிர்மலா B Sc, இல 9, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் வகுப்புக்கள்:- திங்கள், புதன் வியாழன் 4 . 45 - 5. 45 p. m, புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 15-10-88 சனி, ஞாயிறு,4.00-5.30 p m, 8 00 - 9 00 a m, 1989 ற்குரிய மீட்டல் வகுப்புகளும் ஆரம்பிக்கப்படும். (7084)

### G C. E. (O/L) NEW SYLLABUS

பரீட்சையில் திறமைச் சித்தி பெற உதவும் 5 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும் தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம் வெளிவந்துள்ளன. ஒவ்வொன்றும் ரூபா 30/- புத்தகசாலைகளில் கிடைக்கும். உயர் கல்விப்பதிப்பக வெளியீடுகள். (7001)

### ஆங்கில ஆசிரிய நியமனப் பரீட்சை

பயிற்சி வகுப்புகள் இரண்டாவது பிரிவு ஆரம்பம்: 15- 10- 88. சனி, ஞாயிறு நாட்களில் நேரம் 4 30 - 6 00 p.m S B Iyar. 12, வைமன் தி, நல்லூர். (7012)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

உயர்திரு. த. செல்லத்துரை

(வட்டு. பிரபல வர்த்தகர்)

உதயம்: 12- 08- 1915 அஸ்தமம்: 14- 09- 1988

திதி: 14- 10- 1988

அன்பே வடிவாய், எல்லோருக்கும் நல்லவராய் பண்பின் சின்னமாய் நல்லதொரு குடும்பத் தலைவராய், எமது மனங்களிலெல்லாம் நிறைந்து இருந்து எல்லோரையும் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்? உங்களது நினைவுகள் என்றும் எம் மனங்களில் பசுமையாய் இருக்கும்.

உங்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முருகப்பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்

செல்லத்துரை ஸ்ரோர்ஸ்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

(7192)

# Computer Programming in Basic

Duration – 2½ Months
Week day Batch (Tue & Wed 11-30a m.)
Commencing on: 18-10-88
1st instalment : Rs 400/- Only
Practicals on IBM & other Computers
Valuable Certificate will be awarded

## IDP

Institute of Data Processing
K. K. S Road (செல்வா கொலனிடி)
யாழ்ப்பாணம்
தெல்லிப்பளை கிளையில்
17-10-88 (3-30 மணிக்கு) ஆரம்பமாகும்
(7196)

# முதலாண்டு நினைவஞ்சலி



## அமரர் மாரிமுத்து இரத்தினம்

ஆண்டவன் படைப்பு: 09-05-1918 அநியாய அழிப்பு: 26-10-1987

திதி: 14 10-1988

அன்புத் தெய்வமே! எங்களை அன்புடனும் பாசத்துடனும் வளர்த்து எங்களை ஆளாக்கிய தெய்வமே! அநியாய ஷெல் அடியால் மாண்டு மடிந்தீர்களே. தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(7194)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 5 - 6 - 1961

மறைவு: 14 - 10 -1987

செல்வன்

## இரத்தினசிங்கம் சரசிங்கம்

கடந்ததப்பா ஓராண்டு காலம், காடாக இருக்குதப்பா உன் உறைவிடம், கண்மணி ஒன்றை இழந்தது போல கை முடங்கியது உனது ஐயாவுக்கு கால் சறுக்குகிறது உன் அம்மாவுக்கு. அக்கா தங்கச்சிமார் உன்னைத் தேடி அலறுகின்றார்களே, அருமைத் தம்பியோ தனியனாய் வாடி நிற்கிறானே, அத்தான் மைத்துனர் வாடியே துடிக்கின்றார்கள், மருமக்களோ உன்னைத்தேடி அலறுகிறார்களப்பா, எல்லோர் குரலும் ஓயவில்லை உனது தந்தை ஓய்வாக இருக்கலாம் என நம்பியிருந்தார். ஆனால் நீதான் நிரந்தர ஓய்வு பெற்றாய் இனி என்ன வேண்டும் நமக்கு. உன பாதையைத்தான் தேடுகிறோம். ஆண்டு ஒன்றானாலும் எமக்கு தினம் ஒன்றாகவே இருக்கிறதப்பா. பலலக்கில் செல்ல வேண்டியவன் நீ பாடைகூட இல்லாது சென்று விட்டாய். எமது இதயங்கள் உன பிரிவால் வெடித்து விடுமாப்போல் பார்க்கும் இடமெல்லாம் நீயே என்றால் எம்முடன் கூடிக்குலாவ வாராயோ?

ஐயா, அம்மா, அக்கா,
தங்கச்சிமார், தம்பி,
அத்தான், மைத்துனர்,
மருமக்கள்.

சுன்னாகம். (7182)

# கம்ப்யூட்டர் விரிவுரைகள்

## BASIC

with
AMPLE PRACTICALS
2 MONTHS
(INTENSIVE COURSE)

ஆரம்பம்: 24-10 1988

சான்றிதழ் உண்டு

பாதுகாப்பான இடம்

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

(Leaders in Computer Education)
16, 3-ஆம் குறுக்கு வீதி,
(O L R தேவாலய மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்.
(C/588)

"நெஞ்சம் மறப்பதில்லை
அது நினைவை இழப்பதில்லை"

# முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி




ஜனாப் S. H. முஸாதிக்

பிரபஞ்சத்தில்:- 02- 01- 1967 பிரம்படியில்:- 12- 10- 1987

நேற்று வரை இவன் எங்கள் கூட்டாளி ஆனால் இன்றோ! இவன் எம்மத்தியில் இல்லை. இவன நினைவுகள் என்றும் நிதாசனங்களாகவே உள்ளன. அவனுடன் பழகிய அந்த பசுமையான நாட்கள் அவை வளாக வாழ்க்கையின் பொன்னான வார்ப்புகள்

முதலாம் ஆண்டு கலைப்பீட மாணவர்கள்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.
[7027]

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் தோழர்

## கணபதிப்பிள்ளை குமாரசாமி

ஆண்டவன் படைப்பு:- 19- 3- 1941
அநியாய அழிப்பு:- 14- 10- 1987

அழகிய நின் வதனம் கண்டு,
ஆண்டொன்று ஆகிறது
பழகிய நெஞ்சங்கள் பார்த்திடத்
துடிக்கின்றன
குமரா! குறைவின்றி வாழ்கின்றாய்
கூடி நாம் துதிக்கின்றோம். நின்
ஆத்மா சாந்தி பெறுகவென.

மனைவி, மகன், தாய், சகோதரர்கள், மருமக்கள், மைத்துனர்கள், தோழர்கள்

தனலக்குமி வாசா,
சுன்னாகம். (7191)

# Science Academy, Jaffna

## A|L CLASSES

ஒளியியல் By மணியம் சனி /ஞாயிறு 7 . 30 - 8 30 ஆரம்பம் 15 . 10 . 88

மின்னியல் By மணியம் சனி / ஞாயிறு 8 . 30 - 9 . 30 ஆரம்பம் 15 - 10 - 88

வெப்பவியல் By சோதி திங்கள் மட்டும் 3 . 00 - 5 00 ஆரம்பம் 31 - 10 - 88

App / Pure By வெக்டர் சனி / ஞாயிறு 2 . 30 - 4 . 30

App / Pure By பிரேம்நாத் சனி / ஞாயிறு 8 . 30 - 11 . 30

(C/[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை நீடிப்பு

# உரிய காலத்தில் அனுமதிக் கடிதம் இல்லாததால் ஆசிரியர் பாதிப்பு

சுன்னாகம். அக் 14 சேவை நீடிப்புக்கோரி விண்ணப்பிக்கும் ஆசிரியர்களுக்கு குறிப்பிட்ட திகதிக்கிடையில் சேவை நீடிப்பு அனுமதிக் கடிதங்கள் கிடைக்காததால் பலரும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

கல்வி அதிகாரிகள் மூலமாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கல்வித் திணைக்களத்தில் தேங்கிவிடுவதே இதற்குக் காரணமாகும்

உரிய காலத்தில் சேவை நீடிப்புக் கோரி விண்ணப்பித்தும் அக்கடிதங்கள் கல்வித் திணைக்களத்தில் தேங்குவதால் சில ஆசிரியர்களுக்கு சம்பளம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

சேவை நீடிப்புப் பெறுவதற்கு காத்திருக்கும் ஆசிரியர்கள் விண்ணப்பத்தை அனுப்பிவைப்பதோடு நின்று விடாது கல்வித் திணைக்களத்திற்கு சென்று தங்கள் விடயத்தில் அக்கறை எடுக்குமாறு ஆலோசனை தெரிவிக்கப்படுகிறது. (இ-27)

## "ஓம்" திட்டப் பிரதிநிதி மண்டைதீவு விஜயம்

மண்டைதீவு அக் 14 சுவிட்சர்லாந்து 'ஓம்' திட்டப் பிரதம அமைப்பாளர் திரு உவாபைசரின் வேண்டுகோளுக்கு இணங்க இலங்கைப்பிரதிநிதி திரு.ஆனந்தக்கிஷ்ணன் மண்டைதீவுக்கு வருகைதந்து இப்பகுதி ஏழைக்குடிசை வாசிகளைச் சந்தித்தார்.

ஏழைக் குடிசை வாசிகளின் நிலைமைகளைக் கேட்டறிந்த திரு.ஆனந்தக்கிஷ்ணன் 2.500 ரூபாவைச்சில ஏழைக்குடியானவர்களுக்குப்பகிர்ந்தளித்தார்.

இதுவிடயமாக உதயன் செய்தியாளர் அவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

இதுபோன்ற உதவிகளைத் தமது ஓம் திட்டம் இலங்கையில் தற்பொழுது செய்து வருவதாகவும் தொடர்ந்தும் இப்பகுதி ஏழைகளுக்கு உதவுவதற்குத் தாம் விருப்பம் கொண்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு சுவிட்சர்லாந்திலுள்ள தமிழ் அகதிகள் திரு உவாபைசரை பிரதம அமைப்பாளராகக் கொண்டு ஓம் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துள்ளார்கள்.

இத்திட்டம் தற்பொழுது திருநெல்வேலி அனுதை விடுதி, கைதடி அனுதை இல்லம் ஆகியவற்றுக்கு அண்மையில் பண உதவி செய்தது (இ 88)

### ஆள் சேர்ப்பு

வட்டுக்கோட்டை, அக் 14

வலி. மேற்கு பிரதேச சபையின் உப. அலுவலகங்களின் வெற்றிடங்களுக்கு தற்போது ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வலி. மேற்கு பிரதேச சபையின் விசேஷ ஆணையாளராக திரு து.வைத்திலிங்கம் கடமையாற்றுகின்றார். (இ)

### நன்கொடை

சுழிபுரம், அக். 14 சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களின் குடிதண்ணீர் விநியோகத்தைச் சீர்செய்வதற்கு சுழிபுரம் அப்புத்துரை நித்திய மனுநீதி ரூபா முப்பதினாயிரம் வழங்கியுள்ளார். (இ - ச)

## இலவச அப்பியாசக் கொப்பி

மானிப்பாய், அக் 13 வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் இப்பகுதிகளில் இலவச உணவு முத்திரை பெறும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகளை இலவசமாக வழங்கினர்.

சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இந்த நிகழ்ச்சி இடம் பெற்றது.

அதேபோன்று சில்லாலைப் பகுதியைச் சேர்ந்த பிள்ளைகளுக்கும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர், தாளையடி அலங்கமிஷன், அமெரிக்கன் மிஷன் தமிழ்கலவன் பாடசாலை சில்லாலை றோமன் கத்தோலிக்க கனிஷ்ட வித்தியாசாலை ஆகியவற்றில் வைத்து இலவசமாக அப்பியாசக் கொப்பிகளை வழங்கினர். (இ - 90)

## ஓய்வு பெற்றார்

கொடிகாமம், அக் 14 பரந்தன் ரயில் நிலைய அதிபர் திரு. வ. சிவகுருநாதன் 18 வருட கால சேவையின் பின் பதவியில் இருநது ஓய்வு பெற்றார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த திரு. பொ. கனகராசா காங்கேசன் துறை ரயில் நிலையத்திலிருந்து பரந்தன் ரயில் நிலையத்துக்கு அதிபராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார். (இ-75)

## வங்கிக் கிளைகளில் பணப்புழக்கம்

யாழ்ப்பாணம், அச். 14 மானிப்பாய், நெல்லியடி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளிலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளிலும் பணம் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. (இ- ஐ)

# சனசமூக நிலையங்களுக்கான பணம் விரைவில் கிடைக்கும்

மானிப்பாய், அக் 14 சடந்த ஆண்டு நடைபெற்ற அசாதாரண நிகழ்வுகளால் சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணம் இன்னும் வழங்கப்படவில்லை.

சிறந்த முறையில் இயங்கி வரும் இச் சனசமூக நிலயத்துக்குத் தேவையான நிதியை எதிர்காலத்தில் பெற்றுக் கொடுக்க முயல்வேன்.

உடுவில் கற்பொக்கணை கலைபதி சனசமூக நிலைய மூன்றாவது ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் இவ்வாறு கூறினார்.

சுதுமலை சின்மயபாரதி வித்தியாலய ஆசிரியர் திரு. இ. ஆனந்தநடராசா தலைமையில நடைபெற்ற இவ் விழாவில் வடமாநில வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பணிப்பாளர் திரு.எஸ். பாலேந்திரா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இப் பகுதிக்கு ஓர் ஆரம்ப சுகாதார சேவை நிலையம் அமைவதன் அவசியத்தை வலியுறுத்தி விரைவில் அதனை அமைத்துக் கொள்ளுமாறு அவர் தமது உரையின போது கேட்டுக் கொண்டார்.

நிலையச் செயலாளர் செல்வன் ந. தஷ்யந்திரராசா வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றினார்

வலி. தெற்கு உடுவில் பிரதேச சபை பொறுப்பதிகாரி திரு இ கணேஸ்வரன் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலய அதிபர் திரு வை. யோகேஸ்வரன் சனசமூக நிலையங்களின் உத்தியோகத்தர் திரு. கந்தசாமி, சுந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலய அதிபர் திரு. அ. தற்பரானந்தம், கட்டட ஒப்பந்தக்காரர் திரு. எஸ். சாம்பசிவம், ஆசிரியர் திரு. வி. பரிபூரணானந்தசாமா, திரு சு. வே. பஞ்சாட்சரம். திருமதி எஸ். வரதராசா மற்றும் திரு சின்னராசா, நிலையப் பொருளாளர் திரு. க. ஜெகசீலன் உட்பட பலரும் உரையாற்றினர்.

ஆண்டு விழாவையொட்டி நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு திரு. அன்ரன் அல்பிரட் பரிசுகள் வழங்கினார்.

கலை நிகழ்ச்சிகளில் செல்வி கலாஜினி சந்திரவேலுவின் நடனமும், நாடகமும் இடம்பெற்றன. (இ 90)

## சிறுவர் தினவிழா

வட்டுக்கோட்டை அக்14 சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை அதிபர் திருமதி சாரதாமணி மாணிக்கவாசகர் தலைமையில் சிறுவர் தின விழா நடைபெற்றது

விழாவில் பிரதான அம்சமாகப் பாடசாலை மாணவர்கள் பாதயாத்திரை ஒன்றை மேற்கொண்டு சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இறைவணக்கத்திற்காகக் கூடினர்.

அங்கு மாணவர்கள் மத்தியில் வட்டு - திருஞானசம்பந்த வித்தியாசாலை அதிபர் திரு க சிவவாகிசர் சிறப்புரைவழங்கினர்.

பொதுத் தொண்டன் திரு. இ. முருகானந்தன் நன்றியுரை வழங்கினர்'

அம்பாள் ஆலய குரு மாணவர்களை ஆசீர்வதித்துப் பிரசாதம் வழங்கிய வைபவத்துடன் விழா இனிது நிறைவேறியது (இ)

### வேதனம் வழங்கப்படுகிறது

பலாலி, அக் 14 கடந்த ஆகஸ்ட்மாதம் நடைபெற்ற ஜி சீ ஈ. (உயர்தர)பரீட்சையின் போது கடமையாற்றிய பரீட்சை உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் உரிய வேதனம் பரீட்சைத் திணைக்களத்தினால் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையின் போது கடமைபுரிந்தவர்களுக்கான கொடுப்பனவுகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இக்காசோலைகள் கல்வித் திணைக்களத்தில் வைத்து தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. (உ-119)

# பாடசாலை நிகழ்ச்சிகள் தமிழர் கலாசாரத்தை பிரதிபலிக்க வேண்டும்

பாடசாலைகளில் மாணவர்கள் பங்கு கொள்ளும் நிகழ்ச்சிகள் தமிழ கலாசாரங்களைப் பிரதிபலிப்பனவாக இருக்க வேண்டும். அதிபர்கள் பாடசாலை புற முயற்சிகளில் மாணவர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளை முன் கூட்டியே அறிந்திருந்து "குளிக்கப் போய் சேறு பூசும் நிலை" ஏற்படாது பார்த்துக் கொள்ளல் வேண்டும்-

மானிப்பாய் கல்வி வட்டார அதிபர்கள் மத்தியில் உரையாற்றும் போது கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் இவ்வாறு கூறினார்.

இராமநாதன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு தனஞ்செயன் தொடர்ந்து கூறியதாவது:-

பெற்றோர் தினவிழாக்கள், பரிசளிப்பு விழாக்கள் விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றில் எமது கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சிகளை இடம் பெறச் செய்ய வேண்டும். மற்றவர்களின பரிகசிப்புக்கு இடம் கொடுக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இப்படி அவர் கூறினார் [ச- 27]

### சன்மார்க்க சபையினருக்கு நன்றி

சுன்னாகம், அக் 14 கோமாரிநோய் தடுப்பூசிகளை கால்நடைகளுக்குப் போட்டு உதவியமைக்காக குரும்பசிட்டி வாழ் மக்கள் குரும்பசிட்டி சன்மார்க்க சபையினருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

தெல்லிப்பழை கால்நடை வைத்திய அதிகாரி கால்நடை விசாலிப்பு உத்தியோகத்தர் ஆகியோருடன் குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் விவசாயக்குழுவினர் இந்தப்பணியில் ஈடுபட்டிருந்தனர். )இ-27)

விஞ்ஞானம் இரண்டாம்பகுதி

## இலவச பாடநூல் வந்து சேர்ந்தது

பலாலி, அக் 14 கடந்தவருடம் பத்தாம் ஆண்டில், இவ்வருடம் 11 ஆம் ஆண்டில் கல்வி பயின்று வரும் மாணவர்களுக்கு இதுவரை வழங்கப்படாதிருந்த விஞ்ஞானம் இரண்டாம் பகுதி இலவச நூல் யாழ் கல்விப் பணிப்பாளரின் தீவிர முயற்சியினால் யாழ் கல்வித்திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜீ சீ ஈ. சாதாரண தரவகுப்பு மாணவர்களின் பாவனைக்கு மிகவும் அவசியமான இந்நூல் அதிகமான பாடசாலைகளுக்கு இதுவரை கிடைக்கவில்லை. இது குறித்து பல பாடசாலைகளின் அதிபர்களும் பெற்றோர்களும் யாழ். கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தனர்.

பணிப்பாளர் எடுத்த அவசர முயற்சியினால் தற்போது இந்நூல் வந்து சேர்ந்திருக்கிறது

மிகவிரைவில் கொத்தணி அதிபர்களூடாகவும் வட்டாரக் கல்வி அதிகாரிகளூடாகவும் பாடசாலைகளுக்கு இந்நூலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உ-119)

# ஆங்கிலத்தை ஆங்கிலம் மூலமே கற்க வேண்டும்

## ஆங்கில சான்றிதழ் வகுப்பு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரை

பருத்தித்துறை, அக் 14 ஆங்கிலத்தை ஆங்கிலம் மூலமே கற்க வேண்டும்.

மொழியைக் கற்பதற்கு மாணவனைத் தூண்ட வேண்டும்.

அதற்கு மாணவன் அந்த மொழியில் பேச வேண்டும் பாட வேண்டும், ஆட வேண்டும், நடிக்க வேண்டும்

அதன் பின்னரே இலக்கணத்தைக் கற்பிக்கத் தொடங்க வேண்டும்.

ஆசிரியர், எழுதுவினைஞர்களுக்கான விசேஷ ஆங்கில சான்றிதழ் வகுப்பை யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஆரம்பித்து வைத்துப் பேசிய பொழுது ஆங்கில பாடநெறி இணைப்பாளர் திரு. எஸ் தேவபாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த ஆரம்ப விழா இந்துக்கல்லூரி அதிபர் திரு ச. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் தொடர்ந்து உரையாற்றிய திரு. எஸ் தேவபாலசிங்கம் கூறியதாவது:

'தனியார் கல்லூரிகள் ஆங்கில பாடம் கற்கும் மாணவர்களுக்குஎடுத்த எடுப்பிலேயே இலக்கணம் கற்பிக்க முற்படுகின்றன.

அதனால் மாணவர்கள் எவ்வித கவர்ச்சியுமின்றி அப்பாடத்தில நாட்டம் இல்லாமல் இடைநடுவே விட்டு விடுகிறார்கள்.

ஒரு குழந்தை பிறந்து ஒரு வருடம் அல்லது இரண்டு வருடத்தில தானே சூழலில கேட்டவற்றைக் கொண்டு பேசுவதற்கு முயற்சி செய்கிறது.

மூன்று நான்கு வயதில் அக்குழந்தை அழகாகச் சூழலின் மொழியைப் பேசுகின்றது.

அக்குழந்தைக்கு இலக்கண அறிவு எப்படி ஏற்பட்டது.

அது தினமும் அவதானித்தவற்றைக் கொண்டே பேசுகிறது.

அதுபோலவே எமது சூழலிலும் ஆங்கிலம் பேசுவதைக் கேட்க வேண்டும்.

அதற்கு வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் ஒலி, ஒளிபரப்பப்படுவதை உற்றுக் கேட்க வேண்டும்

எமது யாழ்ப்பாண மாணவர்கள் ஆங்கில மொழியை நன்கு எழுதுவார்கள். வாசிப்பார்கள்.

ஆனால் அவர்களால் கதைக்க முடிவதில்லை.

காரணம் என்ன என்று சிந்தித்தால் அவர்கள் ஆங்கிலம் கதைக்கப் பேச வெட்கப்படுகிறார்கள்.

சிறிது பேசுபவர்களையும் வளர்ந்தவர்கள் தட்டிக்கொடுப்பதில்லை.

பாடசாலையில் ஆங்கில பாடவேளை முடிவடைந்ததும் புத்தகத்தை மூடி வைத்து விடுகிறார்கள்,

இப்படி அவர் கூறினார். (ச-118)

# அடம்பன் பகுதியில் அடிக்கடி கொள்ளை

மன்னார் அக் 14 அடம்பன் பகுதியில் கொள்ளைச் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன.

தாமரைக்குளம், வாமதேவபுரம், அடம்பன்குளம், நெடுங்கண்டல் போன்ற இடங்களிலேயே கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கொள்ளைக்காரர்கள் இரவு 8. 30 மணிக்கே தமது கைவரிசையைக் காட்டத்தொடங்கி விடுகின்றனர்.

இக் கொள்ளைகளைத் தடுத்து கொள்ளைக்காரரை மடக்கப்பிடிக்க கிராம மக்களும் தொண்டர் ஸ்தாபனங்களும் முயன்று வருகின்றனர். (ச)

# புனரமைப்பு வேலைகளில் எல்லோரும் இணைந்து செயற்படுதல் அவசியம்

## மின் இணைப்பு வழங்கும் வைபவத்தில் உரை

வவுனியா, அக் 14 "நிர்வாகப் பரவலாக்கலின் கீழ் இடம் பெறுகின்ற புனரமைப்பு வேலைகளில் எல்லோரும் இணைந்து செயற்படுதல் அவசியமாகும்.

எமக்கு உதவி புரியும் நிறுவனங்கள் தாம் வழங்கும் உதவிகள் உரிய முறையில் பயன்படுத்தப்படவேண்டும் என்பதில் அக்கறை காட்டி வருகின்றன.

எனவே மக்கள் நிறுவனங்கள் அனைத்தும் பொதுமக்களுடன் இணைந்து அதிகாரிகளுடன் ஒத்துழைக்க முன்வர வேண்டும்"

பம்பைமடு கிராமத்துக்கு வைபவரீதியாக மின் இணைப்பு வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்பொழுது புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. கே சி லோகேஸ்வரன் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

நெளுக்குளம் கிராமோதய சபைத் தலைவர் திரு. நா சேனாதிராஜா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. லோகேஸ்வரன் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது;

எட்டு மாவட்டங்கள் அடங்கிய தமிழ்ப்பிரதேசத்தில் மக்களின் வறுமை நிலைமையை உத்தேசித்து ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டம் முதன் முதலாக வவுனியாவில் 1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. [illegible] மாவட்டங்களுக்கென 45 கோடி அமெரிக்க டொலர்களை உலக வங்கி உதவியாக வழங்கியது.

பொருளாதார அபிவிருத்தியின் கீழ் வீதிகள், குளங்கள் புனரமைப்புடன் மின்சாரம் வழங்குவதும் திட்டமிடப்பட்டது.

சமூக அபிவிருத்தியின் கீழ் கல்வி, வைத்தியத் துறைகளில் பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

மக்களின் அபிவிருத்திக்குத் தேவையான உள் கட்டமைப்பு வேலைகளில் மின் வழங்கும் திட்டமே எல்லாவற்றிலும் வெற்றிகரமாக இங்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றது

இப்படி அவர் கூறினார். (ச-164)

G.A.Q. - B.A
(89/90 April) (89 December)
தகைமை:
G. C. E. [A/L] 3 பாடங்களில் சித்தி அல்லது ஆசிரிய பயிற்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்
ERIGHTON'S ACADEMY
Manipay
குறிப்பு:
விரிவுரைகள் சனி, ஞாயிறு நாட்களில் விரிவுரையாளர்களால் நடாத்தப்படும்.
(7189)

இதோ சிங்கர் வழங்கும் சீமா டயல் தராசு



• பொருளைப் போட்டதுமே எடையை அறியலாம்.
• இரு பக்கமும் தெரியும் எண் சுட்டுக் குறியீடுகள்
• கழற்றக்கூடிய, துருப் பிடிக்காத பொருள் தட்டு.
• துருப்பிடிக்காத உருக்குத் தட்டுத் தாங்கியும் பலமான பிளாஸ்டிக் நிலைச்சட்டமும்.

சீமா பெடஸ்டல் தராசு (மேசையில் வைப்பது)
மொடல் C 6 TP
அளவுத் திறன்-6 கி.கி. X 20 கி. விலை: ரூ. 2,150/-



சீமா டயல் தராசு (தொங்கவிடுவது)
மொடல் C 6 H
அளவுத் திறன்-6 கி.கி. x 20 கி. விலை: ரூ.1,790/-
மொடல் C 15 H
அளவுத் திறன் – 15 கி. கி. X 50 கி. விலை: ரூ. 1,980/-
ஒரு வருடத்திற்குப் பூரண உத்தரவாதம். இலங்கை அளவை-நிறுவைப் பணியகத்தின் அனுமதி முத்திரை பெற்றவை. சிலோன் வேயிங் மெஷின்ஸ் லிமிட்டெட் உற்பத்தி.



சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.
விவசாயப் பிரிவு சிங்கர் மாசற்ற மேன்மை
Minds/SA/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரம்படி ஒழுங்கையில் நினைவுச்சின்னம்

கொக்குவில் அக் 14

கடந்த வருடம் அக்டோபர் 12 ஆம் திகதியும் அதன் பின்பும் நடைபெற்ற அனர்த்தங்களின் விளைவாக கொக்குவில் பிரம்படி ஒழுங்கையில் உயிர்நீத்த ஐம்பதுக்கு மேற்பட்ட பொதுமக்களின் நினைவாக ஓர் நினைவுச் சின்னம் நிறுவப்பட்டுள்ளது.

பிரம்படிலேன், ஆடியபாத வீதிச் சந்தியில் அமைந்துள்ள இந்த நினைவுச் சின்னம் அக்டோபர் சம்பவத்தில் பெற்றோரையும், சகோதரியையும் பறிகொடுத்த செல்வன் தவராஜலிங்கம் கரன் என்னும் பதினொரு வயதுச் சிறுவனால் திறந்து வைக்கப்பட்டது.

திரு ஆர். நவரத்தினம், திரு. கே. நல்லையா ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைக்க, பிரம்படி ஒழுங்கை சிறுவர்கள் பக்தி கீதமிசைத்தனர்.

உயிர் நீத்தவர்களின் உறவினர்கள் கலந்து கொள்ள இந்நிகழ்ச்சி மிக எளிமையாக நடைபெற்றது.

பெயர் குறிப்பிட விரும்பாத இப்பகுதி பிரமுகர் ஒருவர் - தம் சொந்தச் செலவில் இந்த நினைவுச் சின்னத்தை அமைத்துக்கொடுத்தார். (இ-69)

கிழக்கு மாகாணத்தில்

# விசேஷ அதிரடிப்படையினராலேயே பலர் சித்திரவதை செய்யப்பட்டனர்

## சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆகப்பிந்திய அறிக்கையில் தகவல்

யாழ்ப்பாணம், அக்.14

இந்திய - இலங்கை உடன்படிக்கையின் கீழ் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்ட கைதிகளில் பலர் தாம் விசாரணையின் போது சித்திரவதை செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர். கிழக்கு மாகாணத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட விசேஷ அதிரடிப் படையினராலேயே பெரும்பான்மையானோர் சித்திரவதை செய்யப்பட்டனர்.

அவசரகால நிலைமையின் கீழ் சித்திரவதையும் வாழ்க்கையின் உரிமை மீறல்களும் (Torture and violations of the right to life under states of emergency) என்ற தலைப்பில் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டிருக்கும் ஆகப்பிந்திய அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை உட்பட எகிப்து, ஜோர்தான், பாகிஸ்தான் பேரு, தென் ஆபிரிக்கா, சிலியா துருக்கி ஆகிய நாடுகளில் அவசரகால நிலைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைச் சம்பவங்கள் பற்றி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இலங்கை குறித்து அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தாம் சித்திரவதை செய்யப்பட்டதாகத் தெரிவித்து விடுவிக்கப்பட்ட கைதிகளிடமிருந்து பல்வேறு அத்தாட்சிக் கடிதங்கள் சர்வதேச மன்னிப்புச் சபைக்குக் கிடைத்திருக்கின்றன.

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினரால் பல்வேறு விதமாக சித்திரவதை செய்யப்பட்டதை விபரித்து அவற்றை அத்தாட்சிப்படுத்தும் விதத்தில் ஒரு சிலர் மருத்துவ அறிக்கைகளையும் இணைத்து அனுப்பியிருக்கின்றனர்.

சித்திரவதை செய்யப்பட்ட ஒரு சில முறைகள் வருமாறு:-

* கைபெருவிரல்களில் கட்டித் தொங்கவிடுதல் அல்லது கால் விரல்களில் கட்டித் தலைகீழாகத் தொங்கவிடுதல்—

★ பொல்லுகளால் அல்லது இரும்புக் கம்பிகளால் அடித்தல்.—

★ காயங்களுக்கு மிளகாய்த் தூளைப் பூசுதல்.-

* நகங்களைப் பெயர்த்தெடுத்தல் போன்றவையாகும்.

பாதுகாப்புப்படையினரால் நீண்ட நேரம் சித்திரவதை செய்யப்பட்ட விவரங்களை எல்லாம் விடுவிக்கப்பட்ட பெரும்பாலான கைதிகள் விவரமாகத் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலுள்ள இரகசியப் பொலீஸாரின் நான்காவது மாடி அலுவலகத்திலும் இரகசியப் பொலீஸாரினால் விசாரிக்கப்பட்டபோது தாம் சித்திரவதை செய்யப்பட்டதாக சிலர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டோர் விசேட அதிரடிப்படையினரால் சுடப்பட்டபோது அவர்களின் சடலங்களை புதைக்கும்படி தாம் பலவந்தப்படுத்தப்பட்டதாக விடுவிக்கப்பட்ட பல கைதிகள் தெரிவித்துள்ளனர்.

சித்திரவதை செய்யப்பட்ட கைதிகள் அங்கே இறந்தபோது தாம் பிரசன்னமாக இருந்தாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக நீதி விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

1987 ஆம்ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் திகதி பூஸா முகாமிலிருந்து ''தப்பி ஓட முயற்சித்தபோது'' சுடப்பட்ட எட்டுதமிழ்க்கைதிகளின் மரணம் தொடர்பாக விசாரணை ஒன்று நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதிலும் அதன் முடிவுகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இவர்களின் மரணம் தொடர்பாக சம்பந்தப்பட்ட உறவினர்களுக்கு அரசாங்கம் ஆறு வாரங்கள் வரை தகவல் தெரிவிக்கவில்லையென அந்த உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதன்காரணமாக மரணம் தொடர்பான விசாரணைகளில் கலந்து கொண்டுஅவற்றின் முடிவுகளைப் பெற முடியாமல் போய்விட்டதென்றும், பிரேத பரிசோதனைகள் ஏதும் செய்யப்பட்டிருப்பின் அவற்றின் முடிவுகளையும் பெற முடியாமல் போய்விட்டதென்றும் அவர்கள் முறையிட்டுள்ளனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக இறந்தவர்களின் உடல்களைக்கூட தம்மால் பார்க்க முடியாமல் போய்விட்டது என்றும், அவற்றைப் புதைப்பதற்குக் கூட தமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ- ஐ)

# நாம் விரும்புபவர்களிடம் ஒப்படைக்கப்படுவோம் என்று கூறியே கொண்டு வரப்பட்டோம்

## பரஞ்சோதி சொல்கிறார்

யாழ்ப்பாணம் அக் 14

சென்னையில் வைத்து யாரியிடம் விடுவிக்க வேண்டுமென நாம் விரும்புகிறோமோ அவர்களிடமே நாம் ஒப்படைக்கப்படுவோம்என்றஉறுதிமொழியுடனேயே நாம் இங்கு அழைத்து வரப்பட்டோம்.

அந்த உறுதி மொழி அளிக்கப்படா விட்டால் நாம் சென்னை சிறைச்சாலையிலேயே 'சைனைட்' அருந்தி தற்கொலை செய்து கொண்டிருப்போம்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் உறுப்பினர்களில் ஒருவரான பரஞ்சோதி புதனன்றுஉதயனுக்குத் தெரிவிததார்.

கடந்த 9 ஆம் திகதி இங்கு அழைத்து வரப்படுவதற்கு முன்னர், நாம் சென்னைச் சிறைச்சாலையில் வைத்து ''சைனைட்'' அருந்த முற்பட்டு, சைனைட் வில்லைகளை வாயில் வைத்துக் கடிக்க முற்பட்டபோது எம்மைத் தடுத்த தமிழ்நாட்டு பொலீசார் எமக்கு மேற்கண்ட உறுதியுரையை வழங்கினர்.

பினனர் நாம் 9 ஆம் திகதி அதிகாலை 2-30 மணிக்கு சென்னையிலிருந்து விடுவிக்கப்பட்டு 4 விமானங்களில் இங்கு கொண்டு வரப்பட்டோம்

அன்றையதினம் நண்பகல் 3 மணிக்கு இங்கு வந்து சேர்ந்த நாம் பலாலியில் இருந்து ஹெலிக்கொப்டர் மூலம் பருத்தித்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டோம்.

பின்னர் இன்று காலையில் எம்மில் 7 பேரை ஹெலிக்கொப்டரில் ஏறும்படி கேட்டனர்.

ஆனல் நாம், 'எம்மை விடுவிப்பதாயின் நாம் குறிப்பிடுபவர்களிடமே எம்மை விடுவிக்க வேண்டும் எமக்கு வெளியே பாதுகாப்பான நிலை இல்லை' எனத் தெரிவித்தோம்.

ஆனலும் எம்மை ஹெலிகொப்டரில் ஏற்றி பலாலிக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர் பலாலியில் எமது கை, கால்களைக் கட்டி, எம்மை குப்புறப் படுக்கவைத்தபின் இங்கு கொண்டுவந்து விட்டனர்— இவ்வாறு திரு. பரஞ்சோதி தெரிவித்தார். (அ-90)

# வடக்கு—கிழக்கு புனரமைப்புக்கு கடன்

## உலக வங்கி வழங்கும்

யாழ்ப்பாணம், அக் 14

வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் புனருத்தாரண வேலைகளை மேற்கொள்வதற்காக உலக வங்கிதேவையான அளவு பணத்தைக் கடனாகக் கொடுத்துதவ முன்வந்திருக்கிறது.

சம்பந்தப்பட்டமாவட்டங்களில் 1983 ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட சேதங்களைப் புனரமைப்பதற்காக இந்த நிதியைப் பயன்படுத்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

உலக வங்கி வழங்கவிருக்கும் கடன்தொகை எவ்வளவு என்பது வரையறுக்கப்படவில்லை.

சேதங்களுக்கு ஏற்ற விதமாகஇநதத்தொகை மாறுபட்டதாகஇருக்கும் தமிழ்ப் பகுதிகளில் குறிப்பிட்ட காலப்பகுதியிலிருந்து ஏற்பட்ட சேதங்களை முற்று முழுதாகப் புனரமைப்பதற்கு எவ்வளவு தொகை தேவையோ அந்தப் பணம் முழுவதையுமே கடனாக வழங்க உலக வங்கி முன்வந்திருக்கிறது.

அரச வங்கிகள் ஊடாக இந்தக் கடன் தொகையை தமிழ்ப் பகுதிகளிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான வழிவகைகள் குறித்து அரசாங்கம் தற்போது தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. (இ-ஐ)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்தியமும்

அமரர் கந்தையா செல்வராசா
(தாடி மாமா)

மறைவு
14-09-1988

குழந்தையோற்கும் கூடியமற்றையோற்கும்
மதிப்புமிகு மாமாவாய் வாழ்ந்தவர்!
மாண்புமிகு சேவைக்கு ஓர் செல்வராசா!
தேவைக்கு; உதவிக்குத் தேடும் ராசா—
பிறர்
சேவைக்காய் நாளெல்லாம் அயராது
அலைந்தார்!
அலைவின் முடிவிலவர் ஆவி பிரிந்து
வந்தார்!!!
பிரியத்துக்குரியவர் பிரிந்தார் - பிரியத்துக்கு
உரியவர்கள் நாம்; நாளும் கலங்குகிறோம்!
நல்லவரின் நல்லாத்மா சாந்தியுற—
அவற்கு
அஞ்சலிகூறி ஆண்டவனை வேண்டுகிறோம்!

வீட்டுக்கிருத்திய சமய நிகழ்ச்சியிலும்! மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்களை அன்போடு அழைக்கின்றோம்.

மனைவி, சகோதரி, தந்தை,
மருமக்கள்,

29/5 புகையிரத வீதி
புங்கங்குளம்
யாழ்ப்பாணம். (7023)

ஒப்பந்தம் ரத்து- மாகாணசபைகள் கலைப்புப் பற்றி

# சிறிமாவோ அல்லது அநுராவோ

## தம்முடன் பேசவில்லை என்கிறார் டிக்ஸிற்

கொழும்பு அக் 14

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ரத்துச் செய்துவிட்டு மாகாண சபைகளைக் கலைக்கப் போவதாக சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவோ அல்லது அவர்ன் மகனுன எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்காவோ என்னிடம் ஒருபோதும் தெரிவிக்கவில்லை.

இப்படி கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே என் டிக்ஸிற் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

திருமதி பண்டாரநாயகாவும் திரு அனுரா பண்டாரநாயக்காவும் பல தடவைகள் என்னுடன் பேச்சுக்கள் நடத்தியிருக்கிறார்கள்.

மேற் கூறப்பட்ட விஷயங்கள் குறித்து இருவரும் என்னுடன் பேசவேயில்லை.

ஒப்பந்தத்துடனன இணைப்புப் பற்றியே அவர்கள் என்னுடன் பேசினர்கள்.

தேர்தலில் வெற்றியீட்டியவுடன் சில கொள்கை முடிவுகள் எடுக்கப்படும் எனவும் அப்போது இணைப்பில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகள் தேவையற்றதாகி விடும் என்றும் இருவரும் தெரிவித்தனர்.

என்ன கொள்கை முடிவுகள் என்பதை அவர்கள் தெரிவிக்கவில்லை.

இலங்கை இந்திய நட்புறவு உடன்படிக்கை ஒன்றின் கீழ் இணைப்பில் கூறப்பட்டுள்ள அம்சங்கள் குறித்து பரிசிலனை செய்யலாம் என்ற இந்திய அரசின் எண்ணத்தை நான் அவர்களுக்குத் தெரிவித்தேன்.

பிரதமர் பிரேமதாஸ சீன செல்வதற்கு முன்னர் அவரையும் நான் சந்தித்துப் பேசினேன் அது ஒரு நல்ல சந்திப்பாக அமைந்தது.

திரு. பிரேமதாஸாவின் அணுகுமுறை ஆக்கபூர்வமானதாகவும் நடைமுறைச் சாத்தியமான தொன்றாகவும் இருந்ததை நான் கண்டு கொண்டேன்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ரத்துச் செய்வது என்று சில அரசியல் கட்சிகள் கூறுவதாக பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள் துரதிருஷ்டவசமானவை

இதை இந்திய அரசு, துக்ககரமான நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்றாகக் கருதுகின்றது

இதனால் பாரதூரமான, நினைத்துப் பார்க்கமுடியாத விளைவுகள் தான் ஏற்படும்.

விசேஷமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தனிநாட்டுக் கோரிக்கை தான் பலம் பெறும்.

ஒப்பந்தத்தையும் அதனல் உருவான அதிகாரப் பகிர்வையும் ரத்துச் செய்வது சிங்களப் பெரும்பான்மையினர் தர பின்னடிக்கிறார்கள் என்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வாதத்தை நிரூபிப்பதாகவே அமையும்.

இப்படி திரு. டிக்ஸிற் 'சன' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். (இ-எ)

# உடற் பயிற்சியின் முக்கியத்துவம் குறைகிறது

மானிப்பாய் அக் 14

உடற்பயிற்சியின் முக்கியத்துவம் இன்று பாடசாலைகளில் குறைந்து வருகிறது.

விளையாட்டுப் போட்டிகளில் மட்டுமல்ல ஏதாவது ஒருதுறையில் ஒவ்வொரு மாணவனும் ஒரு திறனில் பயிற்சி பெற்றுக் கொண்டால் பிற்கால வாழ்வுக்கு அது உதவியாக அமையும்.

அத்துடன் மாணவர்கள் வாசிக்கும் பழக்கத்தை அறவே கைவிட்டு விட்டனர். அவர்கள் நிறைய வாசிகக வேண்டும்.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை வருடாநத இல்ல மெய் வல்லுனர் போட்டிகளில பிரதமவிருந்தினராக திரு குலசேகரம்கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் திரு. வி. பொன்னுத்துரை தலைமையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் கொடியேற்றி, வழாவை ஆரம்பித்து வைத்தார்.

பாடசாலை உப அதிபர் திரு. அ.மு. அருணசலத்தின் வரவேற்புரையைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் திரு. தனஞ்செயன உரையாற்றுகையில் தெரிவித்ததாவது;

என்னதான் தடைகள் இருந்தாலும் முயற்சி இருப்பின் எந்த நிகழ்ச்சியையும் சிறப்பாக செய்ய முடியும் என்பதற்கு இப்போட்டி ஓர் எடுத்துக்காட்டாகும்.

எமது கிராமத்துக்கும் தமிழ் இனத்துக்கும் ஏற்ற விளையாட்டுக்களை நாம் நடத்தி மகிழ வேண்டும்.

ஒவ்வொரு போட்டியாளரும் வெற்றியை நோக்காக கொண்டாலும் போட்டியில் பங்கு பற்றுதலே மேலானது. வெற்றி சூடுவதிலும் பார்க்க நிதானமாகவும் நேர்மையாகவும் போட்டிகளில் பங்கு பற்றப் பழக வேண்டும் என்று கூறினர்.

பேஜ் இல்லம் இவ்வருட சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. (இ-90)

# ஆசிரியர்களுக்கு தொலைத்தொடர்பு பயிற்சி நெறி

யாழ்- கல்வித்திணைக்களத்தின் ஓர் அங்கமான தொலைத் தொடர்பு பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட உள்ளது.

பிரஸ்தாப பயிற்சி நெறியில் 45 வயதுக்கு மேற்பட்ட சேவையிலுள்ள கணித, விஞ்ஞன பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொள்ள முடியும்.

3 ஆண்டுகள் நடைபெறும் இந்த பயிற்சி நெறியின் பின் பயிற்சிக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இந்தச் சான்றிதழ் ஆசிரிய கலாசாலை சான்றிதழுக்கு ஒப்பானதாகும்.

பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும், இதுவரை இந்த பயிற்சியை மேற் கொள்ளாத ஆசிரியர்கள் யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரிகு சோமசுந்தரத்துடன் தொடர்பு கொண்டு பயிற்சி நெறிகளில் கலந்து கொள்ள முடியும்.

## ஹாட்லி கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டி

கரவெட்டி, அக் 14

ஹாட்லிக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ''ஹாட்லிக்'' கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி பருத்தித்துறைமாவட்ட உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்டு வருகின்றது.

இப் போட்டிகள் யாழ்ப்பாணம் பருத்தித்துறை கிளிநொசி, முல்லைத்தீவு வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நடைபெறுகின்றன.

அந்தந்த மாவட்டத்தில் வெற்றியீட்டும் குழுக்கள் மாவட்ட ரீதியில தெரிவு செய்யப்பட்டு இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படும்.

இப்போட்டிகளில் பங்குபற்றும் குழுக்களுக்கு ஹாட்லிக் கலலூரி பழைய மாணவர் சங்கம் லண்டன் கிளையினல் பரிசில்கள் வழங்கப்பட உளளன.

பருத்தித்துறைமாவட்டத்தில் இடம் பெற்றுள்ள போட்டிகளில்: மனோகரா விளையாடடுக் கழகத்தை வல்வை. வி. கழகம் 5 கோல்களால் வென்றது.

பொமேஸ் விளையாட்டுக் கழகம் சென். அந்தனீஸ் விளையாட்டுக் கழகம் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டன.


என். சி. சி. விளையாட்டுக்கழகத்தை (1) கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் 5 கோல அடிப்படையில் வெற்றி பெற்றது

டயமன்ட் விளையாட்டுக் கழகத்தை வீனஸ் விளையாட்டுக் கழகம் 2 கோல் அடிப்படையில் வென்றது.

இதேவேளை மாவட்ட ரீதியிலான இறுதிப் போட்டிகள் இம்மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் 2. ஆம் திகதி வரை நடைபெறறன. (இ-70)


உஷா

பெருமிதமாக அறிமுகப செய்யும் பலவிதமான சீலிங் மின்விசிறிகள்



உஷா ஸ்டான்டர்ட்
விலை: ரூபா 1500 முதல் 1575/- வரை

● 36", 42", 48", 56" அளவுகளில்
● ஒரு அடி நீளமான கீழ்த்தண்டு. இணைப்பு வசதிகள் இரப்பர் புஷ்ஷி 2 கவசங்கள். 5 வேக ரெகுலேட்டர் எல்லாம் பூர்த்தி
● மேலதிகமாக ரூ 75/- செலுத்தி மின்குமிழ் ஒன்றை இணைத்துக் கொள்ளலாம்.

அண்மையிலுள்ள உஷா விற்பனையாளரிடம் இன்றே விரையுங்கள்!

தொகையாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு

உஷா அலங்கார விசிறிகள்
பொன் வண்ணத்திலும் அலங்கார இணைப்புகளுடன்
விலை ரூ 1750/- முதல் 1975/- வரை

● தேவைக்கேற்ப கண்ணைக் கவரும் மண் நிறத்திலும் வெள்ளை நிறத்திலும்
● கோள்வடிவ மின்குமிழ்

தயாரித்து விநியோகிப்போர்.
உஷா இண்டஸ்ரீஸ் லிமிடெட்
68, அத்திடிய ரோட் ரத்மலானை
தொலைபேசி: 71-6922, 71-791, 71-71

நீர்வையிறைக்க கோடிக்கும் ட... பயிற்றுவிக்கும் நிலையம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு.

**பொருள்:**

அறிவுடையவரின் நட்பு பிறை நிறைந்து வருதல் போன்ற தன்மையுடையன; அறிவிலாவரின் நட்பு முழுமதி தேய்ந்து பின் செல்லுதல் போன்ற தன்மையுடையன.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 298/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24605, 22073

14-10-1988


## கல்வி முறை சீராக...

மாணவர்கள் ஆங்கிலம் கற்க வேண்டியதின் அவசியம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய, பேராசிரியர் தில்லைநாதன் ஆங்கிலம் பயில வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்கிறார்.

மாணவர்கள் ஆங்கிலம் கற்க வேண்டும் என்ற கருத்து இப்போது அடிக்கடி எழுப்பப்பட்டு வருகிறது. ஆங்கிலம் சரிவரப் போதிக்கப்படாமையால் ஏற்பட்ட பாதிப்புகளை பெற்றோர்களும், மாணவர்களும் இப்போது உணரத் தொடங்கி உள்ளதே அதற்குக் காரணமாகும்.

ஆங்கிலத்தில் போதிய தேர்ச்சி பெறுமையால் உயர்கல்வி, வேலைவாய்ப்பு, வர்த்தகம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் எமது இளைஞர்கள் மிளிர முடியாமல், தங்கள் திறமையைச் சரிவரப் பயன்படுத்த முடியாமல் உள்ளது.

சுயமொழி மூலம் போதனை என்றால் ஆங்கிலத்தை ஒதுக்கி விடுவது என்ற ஒரு தப்பான போக்கினால், எமது இளைஞர்கள் எந்தத் தரையிலும் தலை நிமிர்ந்து நிற்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டது.

ஆங்கிலம் ஒரு சர்வதேச மொழி. அது நவீன யுகத்தின் தொடர்பு மொழி. உலகப் பொதுமொழி என்றும் கூறலாம்.

அந்தக் காரணங்களால் ஆங்கில அறிவு இல்லாதவன் வெளி உலகத்தில் நடப்பவற்றையும், அறிவு வளங்களையும் பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலைமை உண்டாகிவிட்டது.

தாய்மொழி மூலக் கல்வி போதனையுடன், ஆங்கிலக் கல்விக்கும் உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இதுவரை விட்ட தவறு இனியாவது திருத்தப்படுவது மிகவும் அவசியம். ஆங்கில அறிவு இல்லாதவர்கள் இருண்ட உலகத்தில், தனித்து வாழும் நிலைக்குத் தள்ளப்படுவர்.

இலங்கையில் கல்வி கற்றவர்களின் வீதம் உயர்ந்திருந்தாலும், ஆங்கிலத்தை உதாசீனம் செய்ததன் பயனாக, எமது மாணவர்கள் கண் இருந்தும் குருடர்கள் போன்ற நிலையில் தத்தளிப்பதை எவரும் மறுக்க முடியாது என்று பேராசிரியர் தில்லைநாதன் நிலைமையைச் சரியாக ஆராய்ந்திருக்கிறார்.

கல்வித் திட்டங்களைத் தயாரிப்போர் அனேகமாக அரசியல்வாதிகளாகவும், அதிகாரிகளாகவும் இருக்கிறார்கள் என்றும்—

அவர்களில் பலருக்குக் கற்பிக்கிறவர்களோடும் ஆசிரியரோடும், விரைந்து வளர்ச்சி பெறும் கல்வித் துறையோடும் வரையறுக்கப்பட்ட தொடர்பு மட்டுமே உண்டு என்றும் —

அந்தக் காரணமே நாட்டின் கல்வித் திட்டங்கள் பிரசைகளுக்கு உண்மையான — விரும்பிய — பலனளிக்காமல் போவதற்கு அடிப்படை என்றும் — பேராசிரியர் தில்லைநாதன் எடுத்துரைத்துள்ளார்.

கல்வித் திட்டங்கள், அல்லது கல்வி முறைகள் அரசியல் லாபம் கருதாக வகுத்தில் சமூக நலனையும் மக்கள் முன்னேற்றத்தையும் கருத்தில் இருக்கித் தயாரிக்கப்பட வேண்டும். அந்தப் பொறுப்பு அரசியல் சாராத கல்விமான்களிடம் ஒப்படைக்கப்படுதல் மிகவும் அவசியம்.

அரசாங்கம் மாறும் போது கல்வித்திட்டமும் தலைகீழாக மாற்றப்படும் நிலை தவிர்க்கப்பட வேண்டும். அப்போது தான் கல்வித் துறையில் சீர்திருத்தங்களையும், முன்னேற்றத்தையும் காண முடியும்.

## நஜிபுல்லா பதவி விலகி அமைதிக்கு வழிகாட்டுவாரா?

காபூல், அக் 12

ஆப்கன் அரசுத் தலைவர் நஜிபுல்லாவின் பதவி விலகுவதன் மூலம் தான் கிளர்ச்சிக் குழுக்களின் தலைவர்களுடன் அமைதிப் பேச்சுக்கள் நடத்துவது சாத்தியமாகுமா? இது குறித்து ஆப்கன் ஆளும் மக்கள் ஜனநாயகக் கட்சியின் மத்திய செயற் குழுக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படவுள்ளது.

இப்போது இக் கூட்டம் நடைபெறும் என்பது அறிவிக்கப்படவில்லை. கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் கூட இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

முஜாகிதீன் கெரில்லாக்கள் ஜனாதிபதி நஜிபுல்லாவுடன் பேச்சுக்கள் நடத்த முடியாது என்று மறுத்து வருகின்றனர்.

நஜிபுல்லா ஒரு பயிற்றப்பட்ட கே.ஜி.பி உளவாளி என்று அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். (எ)

### திருச்சபை இல்லம் மீது தாக்குதல்

கேப்டவுன், அக் 13

ஜோஹன்னஸ்பேர்கில் உள்ள ரோமன் கத்தோலிக்க திருச்சபை இல்லத் தலைமைக் காரியாலயம் நேற்று முன்தினம் சேதமாக்கப்பட்டது. (எ-டி)

30 ஆண்டுகளின் பின்னர்:

# சோவியத் - சீன உச்சி மாநாடு; 1989 ஆம் ஆண்டில் நடைபெறும்!

## பீக்கிங்கில் சிரேஷ்ட தலைவர் அறிவிப்பு

பீகிங், அக் 13

சோவியத், சீன அரசுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாடு அடுத்த ஆண்டு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் சிரேஷ்ட தலைவர் டெங் ஷியாபிங் இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

உச்சி மாநாடு சம்பந்தமான பூர்வாங்க அலுவல்கள் சம்பந்தமான பேச்சுக்களை நடத்த சீன வெளியுறவு அமைச்சர் கியூ ஷிபாங் அடுத்த மாதம் மாஸ்கோ செல்லவிருக்கிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

சோவியத் யூனியன், சீனா ஆகிய நாடுகளின் தலைவர்கள் 1959 ஆம் ஆண்டின் பின்னர் சந்தித்துப் பேசவிருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

சீனத் தலைவர் டெங் ஷியாபிங் இத்தகவல் வெளியாவதற்கு முன்னர் பின்லாந்து ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார். பேச்சுக்கள் 1½ மணித்தியாலங்கள் வரை நீடித்தன.

சித்தாந்த வேறுபாடுகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து இருநாடுகளின் உறவுகளும் மோசமடைந்து வந்தது.

அண்மைக்காலமாக உறவுகளைச் சீராக்க இருநாடுகளும் பல நடவடிக்கைகள் எடுத்து வந்தன. (எ)

## நெடு. அணியைச் சேர்ப்பதா? 'ஜா' அணி முடிவு செய்யவில்லை

திருச்சி, அக். 13

நால்வர் அணியை அ. தி. மு. க. (ஜா) சேர்த்துக் கொள்வது பற்றி இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை என்று முன்னாள் அமைச்சர் முத்துசாமி கூறினார்.

தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்ய அ. தி. மு. க. தலைவர் ஜானகியுடன் முத்துச்சாமியும் திருச்சிக்கு வந்தார்.

முத்துசாமி நிருபர்களிடம் கூறியதாவது:

கே: அ. தி. மு. க. (ஜா) வில் நால்வர் அணி, சேர்ந்தால் ஆர். எம். வீரப்பன், காளிமுத்து ஆகியோர் கட்சியை விட்டு வெளியேறி விடுவார்கள் என்று கூறப்படுகிறதே?

ப: அப்படி எந்த கருத்து வேறுபாடும் எங்களிடம் இல்லை. 18 பேர் கொண்ட குழு தான் எந்த முடிவையும் எடுக்கும். இப்போது பேச்சுவார்த்தை தான் நடக்கிறது. அ. தி. மு. க. (ஜா) வுடன் நெடுஞ்செழியன், திருநாவுக்கரசு, பண்ருட்டி ராமச்சந்திரன், அரங்கநாயகம் ஆகியோரை சேர்த்துக் கொள்வது பற்றி இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை.

கே: நால்வர் அணியும் அ. தி. மு. க. (ஜா) கட்சியுடன் இணைந்துவிடும். பின்னர் அ. தி. மு. க. காங்கிரஸ் கட்சியும் கூட்டணி ஏற்படும் என்று பண்ருட்டி ராமச்சந்திரன் கூறி இருக்கிறாரே?

ப: இது கட்சியின் கருத்தல்ல. பண்ருட்டி ராமச்சந்திரனின் சொந்த கருத்தாகும்.

கே: காங்கிரஸ் - அ. தி. மு. க. (ஜா) கூட்டணி ஏற்படுமா?

ப: கட்சி பற்றி எந்த முடிவு என்றாலும் 18 பேர் குழுதான் முடிவு எடுக்கும். காங்கிரஸ் கட்சியுடன் ஒருபோதும் கூட்டணி சேரமாட்டோம் என்று ஜானகி எம். ஜி. ஆர். அறிவித்திருக்கிறார். அவர் கருத்தில் எந்தவித மாற்றமும் இல்லை. அது அப்படியே உள்ளது.

கே: திருநாவுக்கரசு டில்லி சென்றது ஏன்?

ப: திருநாவுக்கரசு பொதுக்குழு உறுப்பினர். கட்சியில் யார் பக்கம் அதிக உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பன போன்ற மெஜாரிட்டி விபரங்களை தேர்தல் கமிஷனிடம் சொல்லச்சென்றார். ஆதாரங்களை ஒப்படைத்துவிட்டு வந்து இருக்கிறார். (எ-4)

## டார்ஜிலிங் வளர்ச்சி சபை தேர்தல் டிசம்பர் 15க்கு முன்னர்!

கல்கத்தா, அக். 12

டார்ஜிலிங் மலை வளர்ச்சி சபைச் சட்டத்துக்கு இந்திய ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கிவிட்டார்.

மேற்கு வங்காள அரசின் நிர்வாக அமைப்புக்குள் உட்பட்டே இந்த சபை இயங்கும்.

இதற்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் நடைபெற்று முடிந்துவிடும் என்று மேற்கு வங்காள மாநில முதலமைச்சர் ஜோதிபாசு தெரிவித்தார்.

மூன்று மாவட்டங்களில் வாழும் 6½ லட்சம் கூர்க்கா மக்கள் இத்தேர்தலில் வாக்களிப்பார்.

இம்மாதம் 15 ஆம் திகதிக்குள் கூர்க்காப் போராளிகள் அனைவரும் ஆயுதங்களை ஒப்படைத்து விடுவார் என்றும் முதலமைச்சர் ஜோதிபாசு நம்பிக்கை தெரிவித்தார். (எ)

## ஜோர்தான் நாட்டில் பொதுத்தேர்தல் ஒத்திவைப்பு

அம்மான், அக். 13

ஜோர்தானில் பொதுத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

மன்னர் ஹுசேன் இது சம்பந்தமான உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார்.

தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்காகவே பொதுத்தேர்தல் ஒத்திவைக்கப்படுவதாக மன்னரின் உத்தரவு கூறுகிறது.

கைப்பற்றப்பட்ட மேற்குப் பிரதேசம் இதுவரை காலமும் ஜோர்தானின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வந்தது.

இப்போது அந்த நிர்வாகத்தை ஜோர்தான் கைவிட்டு விட்டது. அதன் காரணமாக தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் மன்னரின் அறிவிப்பு கூறுகின்றது. (எ)

### அரபாத் மீது கொலை முயற்சி

குவைத், அக் 13

கொலை முயற்சி ஒன்றில் இருந்து பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் உயிர் தப்பினார்.

இதை அவரே குவைத் நாளிதழ் 'அல்கபஸ்' ஸுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

எப்போது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது?

எப்படி உயிர் தப்பினார் போன்ற விபரங்களை அவர் பத்திரிகைப் பேட்டியில் வெளியிடவில்லை.

### 'செக்'கில் புதிய அரசு

பிராக், அக். 12

செக்கோஸ்லேவேகியப் பிரதமர் நேற்று முன்தினம் ராஜினாமாச் செய்தார்.

சோவியத் யூனியன் பாணியிலான அரசியல் சீர்திருத்தத்தை மேற்கொள்ள முடியாது என்று செக்கோஸ்லேவேகியா அமைச்சரவை முன்னர் தீர்மானித்திருந்தது.

அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடியைத் தொடர்ந்தே பிரதமரும் ஏனைய அமைச்சர்களும் ராஜினாமாச் செய்தனர் (எ)

### அல்ஜீரியாவிலும் கருத்துக் கணிப்பு

அல்ஜீரியாவில் அரசியல் சீர்திருத்தம் மேற்கொள்வது பற்றி மக்களின் கருத்தை அறிந்து கொள்ள சர்வசன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படும் என்று அல்ஜீரிய, இராணுவத்தலைவர் தெரிவித்தார்.

எப்போது வாக்கெடுப்பு நடத்தப்படும் என்பதை அவர் தனது வானொலி உரையில் வெளியிடவில்லை.

## செந்தாமரைப் பூவில் செம்மாந்து வீற்றிருக்கும் செல்வத்தின் அதிபதி

உருவும், நலனும் ஒளியும் சிறந்து அழகாக விளங்கும் ஒன்றைத் 'திரு' என்று கூறுகிறோம்.

எல்லோராலும் விரும்பப்பட்ட அழகு பொருந்தியவள் திருமகள்.

அவள் அழகு லட்சுமி.

அவளே ஆதிலட்சுமி, கஜலட்சுமி, தனலட்சுமி, தானியலட்சுமி, வீரலட்சுமி, விஜயலட்சுமி, சந்தானலட்சுமி, சௌபாக்கியலட்சுமி என்று அட்டலட்சுமிகளாய்க் காட்சி தருபவள்.

சுதந்திரம், சுபீட்சம் என்பவற்றிற்கும் அவளே அதிதேவதை.

ஒருவனின் முகத்திலோ வாழ்விலோ, வீட்டிலோ, வளத்திலோ இலட்சுமி இல்லாவிட்டால் இலட்சுமி கடாட்சம் இல்லாதவன் என்றும் இலட்சுமிகரம் இல்லாதவன் என்றும் உலகம் கூறும்.

கொள்ளைக் கொள்ளைக் குறையாத நிதியின் குவை அழகில் பிறந்தவள்; செந்தாமரைப் பூவில் செம்மாந்து வீற்றிருக்கும் நந்தா விளக்கு என்று வழங்குவர்.



வைஷ்ணவர்கள் அவளைப் 'பெரியபிராட்டி' என்று கொண்டாடுவர்.

இலட்சுமி இம்மை மறுமைப் பயன்களை அருளுகின்ற உலக அன்னை என்றும், எல்லா பக்தர்களுக்கும் உறைவிடம் என்றும், மக்களுக்கு வேண்டியவற்றைக் கொடுக்கும் காமதேனு என்றும் அவள் மகாலட்சுமி என்றும் பெரியோர் கூறுவர்.

அவளின் பார்வை அமுதப்பார்வை.

நவராத்திரி விழாவில் கடைசி மூன்று நாட்களிலும் திருமகளைத் தியானித்து வரம் வேண்டுவர்.

செல்வத்தின் அதிபதியாகிய இலட்சுமி நடுநாயகியாக விளங்குவது செல்வத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாகும்.

பொருளாலேதான் எல்லாம் ஆகும். இத்தகைய செல்வம் யாவர்க்கும் செல்வம்; எல்லோருக்கும் அவசியமானது.

பொருட்செல்வம் வாழ்வை வளமாக்குவதுடன் அருட்செல்வத்தை அடைவதற்கும் துணையாவது அதுவே.

எனவே இம்மையில் இன்பமும் மறுமையில் நற்பேறும் அடைவதற்கு செல்வம் வழிசெய்கின்றது.

பொருளில்லாதவன் வாய்ச்சொல் செல்லாக் காசாகிவிடுகின்றது.

சீரும் சிறப்பும் சேர்க்கும் பொருளை அருளும் திருமகளைத் தியானித்து வளமும் நலனும் அடைவோமாக. (ச)

### பரமேஸ்வரி சிவராமலிங்கம்

பொன்னும் மணியும் அணியும், போகமும் சந்ததியும் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி செய்பவள் திருமகளே.

பொன்னரசி
சாரணனர் தேவி
புகழரசி
மின்னு நவரத்தினம் (போல)
மேனியழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம்
ஆதரிப்பாள்
ஸ்ரீதேவி
தன்னிரு போற்றுளே
சரண்புகுந்து
வாழ்வோமே.

இலட்சுமி பூசிக்கிறு; அழகின் புனைநலம் (எ)...

### பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், அக் 14

பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழுவின் மூன்றாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் உள்ள இலங்கை மாதர் சங்க மண்டபத்தில் நடைபெறும். [-]

முகவர் திட்டத்தின் கீழ்

## சிறிய அளவு கடன் வழங்கும் புதிய நடைமுறை

### இலங்கை வங்கி அறிமுகம்

யாழ்ப்பாணம், அக். 14

முகவர் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கும் வர்த்தகர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் சிறிய அளவு கடன் தொகைகளை வழங்கும் புதிய நடைமுறை ஒன்றை யாழ் பிராந்திய இலங்கை வங்கி அறிமுகப்படுத்தியிருக்கிறது.

சமூக ஊக்குவிப்புக் கடன் என்ற பெயரில் இது அமுல்படுத்தப்படும்.

இந்தத் திட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஊர்காவற்றுறையில் ஆரம்பித்து வைக்கப்படும்.

ஆரம்பத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்குத் தகுதியுடைய ஒவ்வொருவருக்கும் ஐயாயிரம் ரூபா என்ற அடிப்படையில் ஆயிரம் பேருக்கு கடன் வழங்கப்படும்.

இதன் பொருட்டு இலங்கை வங்கி சம்பந்தப்பட்ட முகவருக்கு ஐம்பதினாயிரம் ரூபாவை வழங்கும்.

இதற்காக வங்கி முகவரிடமிருந்து மாதம் 1½ சதவீதத்தை வட்டியாக அறவிடும்.

முகவர் கடன் பெற்ற வாடிக்கையாளரிடமிருந்து 2½ சதவீதத்தை வட்டியாக அறவிடுவார்.

கடன் பெறுவதற்குத் தகுதியுடையவர்களை சம்பந்தப்பட்ட பகுதிக் கிளைக்குச் சொந்தமான இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளரும், முகவரும் தெரிவு செய்வார்கள்.

ஏற்கனவே இலங்கை வங்கியிலிருந்து கடன் பெற்று அதனைத் திருப்பிச் செலுத்தாதவர்களுக்கு இந்தக் கடன் கிடைக்கமாட்டாது.

ஊர்காவற்றுறையில் ஆரம்பிக்கப்படும் இந்தக் கடன் திட்டம் படிப்படியாக யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

ஆரம்பத்தில் முகவர் ஒருவருக்கு ஐம்பதினாயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டாலும் இந்தத் தொகை படிப்படியாக இரண்டு லட்சம் ரூபா வரை விஸ்தரிக்கப்படும். (இ ஐ)

### திறக்கக்கோரியே ஆர்ப்பாட்டம்

மூடப்பட்ட 115 பாடசாலைகளை திறக்க வேண்டும் என்று கோரியே நேற்று சண்டிலிப்பாயிலும் மற்றும் இடங்களிலும் மாணவர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சண்டிலிப்பாய் பொலிஸ் நிலையத்தை நோக்கி மாணவர் ஊர்வலமாக அரசு எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பிக் கொண்டு சென்றபோதும் பொலிஸார் மாணவர்களோடு தலையிட்டது; அரச பஸ்கள் சில எரிக்கப்பட்டன. (இ-எ)

## விவசாயக் காப்புறுதி இழப்புக்களைத் தவிர்க்கும்

### விவசாய அதிகாரி ஆலோசனை

பருத்தித்துறை அக் 14

'விவசாயிகள் வெங்காயம் மிளகாய் போன்ற பேட்டுப் பயிர்களை பயிர்க் காப்புறுதி செய்ய முன்வர வேண்டும். அப்படிச் செய்யாததால் வெங்காயத்தில் கடந்த காலங்களில் வெள்ள அழிவுகளினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவ அரசினால் முடியாமல் போய்விட்டது.

எனவே இப்பகுதியிலுள்ள சங்கங்கள் ஊடாக மேட்டுப் பயிர் செய்கையாளர்கள் பயிர்க் காப்புறுதி செய்ய ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

புலோலி மேற்கு சராவதனி விவசாய சமூக நடை வளர்ப்புச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றும் பெருமை கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. வி. இராசையா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது;

வடமராட்சிப் பகுதியில் முதன் முதலாக புலோலி மேற்கு விவசாயிகள் தான் விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

இவ் ஓய்வூதியத் திட்டத்தில் 150 விவசாயிகள் சேர்ந்துள்ளனர்.

இப்பகுதியில் அரசாங்க உத்தியோகத்தர்களும் விவசாயத்தைப் பகுதிநேரத் தொழிலாகச் செய்கிறார்.

இவ் அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது கிராமப்புறங்களுக்குத் தேவையான விபரங்களை உடனுக்குடன் தமது அயலவர்களுக்குத் தெரிவிக்கின்றார்கள்.

இதனால் இப்பகுதியில் கடமையாற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் விவசாயிகளின் தேவைகளை உடனுக்குடன் கவனிக்க முடிகிறது.

—இப்படி அவர் கூறினார்.

புலோலி மேற்குப் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. க. சண்முகநாதனும் உரையாற்றினார். (உ ச-118)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உழுந்து மா

பப்படம், தோசை, வடை முதலிய தேவைக்கு பாவிக்கக் கூடிய சுத்தமாகவும் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டு விற்பனையாகிறது.

தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு விசேட கழிவுண்டு.

**அண்ணா கோப்பிக்கடை**
யாழ்ப்பாணம்.



# உதயன்

14 - 10 - 1988 வெள்ளிக்கிழமை



## மல்லி கலந்த கோப்பி

யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட மல்லிக் கோப்பி இப்போது 100gr/ பக்கட்டுக்களில் வெளிவருகிறது.

1 பக்கட்விலை 10/- ரூபா வியாபாரிகளுக்கு விசேட கழிவுகொடுக்கப்படும்.

**அண்ணா கோபபிக் கடை,**
யாழ்ப்பாணம்.



## கோழிக் குஞ்சு விநியோகம்

12-10-88 புதன்கிழமை விநியோகிக்க வேண்டிய குஞ்சுகள் இன்று 14-10-88 வெள்ளிக்கிழமை பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் (f) பாம் சென்ரர்**
C/o Nallur Video Centre
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
7032

## பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல "சைனீஸ் ஹொட்டேல்" ஒன்றிற்கு ஆங்கில அறிவுடைய பணியாளர் (Waiter) தேவை. காலை 10-00 மணிமுதல் 11 00 மணிவரை சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**சைனீஸ் ட்ரகன் றெஸ்ரோரன்ற்**
168, கோவில் வீதி,
(7021) யாழ்ப்பாணம்.

அம்பிகை கடாக்ஷம் பொங்கும்
**றேயல் வீடியோ மூவிசார்**
கொண்டாடும்
**நவராத்திரி விழா**

புலவர் செ. து. தெட்சணாமூர்த்தியின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் தமிழ்மணி S. கணேசசுந்தரத்தின் பஜனைகளும் கதாகாலட்சேபமும் மற்றும் பல கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். பக்தர்கள் அனைவரும் விழாவில் கலந்து அம்பிகையின் அருள்பெறுமாறு அழைக்கின்றோம்.

வீடியோப் படப்பிடிப்பில்,
முன்னணியில் நிற்கும்
**றேயல் வீடியோ மூவிஸ்**
S. சிவராஜா, இயக்குனர் — 7/1, புது வீதி, கொய்யாத்தோட்டம்.
சகல வைபவங்களுக்கும் நாடுங்கள்
றேயல் வீடியோ மூவிஸ்
(7019)

## வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வி

**B.A., B.Com.**
பாட நெறிகள்

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தோரும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம் விண்ணப்பங்களை நகலை பெற்றுக்கொள்ளலாம்.

விரிவுரைகள் ஆரம்பம்: **16-10-1988**
ஞாயிறு காலை 8.00

குறிப்பு: ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கு தபால் மூலம் விபரங்கள் அனுப்பப்பட்டுள்ளன 16-10-88இல் ஆரம்பமாகும் விரிவுரைகளுக்கு தவறாது சமுகமளிக்கவும் காலதாமதம் காரணமாக கடிதம் கிடைக்காதவர்களும் விரிவுரைகளுக்கு சமுகம் அளிக்கவும்

**B.A 1988 DEC.**
அரசறிவியல்
"Public Administration"
பொது நிர்வாகம்
திரு. தமீம்
**16-10-88 ஞாயிறு 8,00 a.m**

**BECON**
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C.596)


# நாம் வன்முறையை நேசிப்பவர் அல்லர்
## வல்லையில் கிட்டு பேச்சு

வடமராட்சி, அக். 14

நாம் வன்முறையை நேசிப்பவர்கள் அல்லர். எமது மக்களின் அமைதிக்கும் நல்வாழ்வுக்கும் நாம் போராடி வருகின்ற வேளையில் எந்த அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள மறுப்புத் தெரிவித்ததில்லை. எமது மக்களுக்காக அவர்களின் அமைதிக்கும், சுய உரிமைக்குமாக நாம் எவ்வளவோ விட்டுக்கொடுத்தும் கூட இந்திய அரசு தனது நிலைப்பாட்டில் இருந்து இறங்கி வராத நிலையாலேயே பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வல்வை ரேவடிக் கடற்கரையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஉறுப்பினர்களில் ஒருவரான கிட்டு குறிப்பிட்டார்.

இந்திய இராணுவத்தினரால் யாழ் போதனா வைத்தியசாலை வளவில் வைத்து கடந்த 12ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் திரு. கிட்டு உட்பட விடுதலைப் புலிகளின் 9 உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களை பிரசைகள் குழு உறுப்பினர்களும், செஞ்சிலுவை சங்க யாழ் பிரிவு உறுப்பினர்களும் விடுவிக்கப்பட்ட அன்றே வல்வெட்டித்துறைக்கு அழைத்து வந்தனர்.

கிட்டுவும் ஏனைய உறுப்பினர்களும் வல்வெட்டித்துறைக்கு அழைத்து வரப்பட்டதை அறிந்து ஆயிரக்கணக்கான மக்கள் ரேவடிக் கடற்கரையில் கூடினர். அவரைக் கண்ட மக்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து கரகோஷம் செய்து அவர்களை வரவேற்றனர்

வடமராட்சியில் ஊரடங்கு அமுல்செய்யப்பட்டிருந்த போதிலும் பெருந்திரளான மக்கள் அங்கு கூடியிருந்தது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு கூடியிருந்த மக்கள் மத்தியிலேயே கிட்டு உரையாற்றினார். அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

எங்களைப் பொறுத்தவரையில் நாம் இந்திய மண்ணில் எவ்வித வன்செயலிலும்ஈடுபடவில்லை இந்திய அரசுக்கு எதிராகத் துளியேனும் செயற்படவில்லை.

நெருக்கடிகள், இடையூறுகள் மத்தியிலும் சிரமத்தைப்பாராது இங்கு திரண்டிருக்கும் மக்களாகிய உங்கள் எழுச்சியும் உணர்ச்சிப் பிரவாகமும் எங்களுக்கு உற்சாகமூட்டுகின்றது என்றார்: வல்வைப் பிரசைகள்குழுத்தலைவர் எஸ் செல்வேந்திரா தலைமையில் மாலை 5 30 மணியளவில் நடைபெற்ற மேற்படி கிட்டுவின் உரை மாலை 6.30 மணியளவில் முடிவடைந்தது. (அ-160)

## ஸ்ரீகோதாவில் குண்டு

கொழும்பு, அக்.14

ஸ்ரீ ஜெயவர்த்தனபுரவில் ஐ.தே. க. அலுவலகம் உள்ள ஸ்ரீகோதாவில் குண்டு ஒன்று வைக்கப்பட்டிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் பாதுகாப்புப் படையினரால் அது வெடிக்க வைக்கப்பட்டது.

பிளாஸ்டிக் குழாய் ஒன்றினுள் இக்குண்டு வைக்கப்பட்டிருந்தது

இச் சம்பவம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது (அ எ)

## மாநகரசபை இயங்குகிறது

யாழ்ப்பாணம், அக். 14

யாழ். மாநகரசபையின் அத்தியாவசிய அலுவலகங்கள் மீண்டும் கடந்த புதன்கிழமை முதல் இயங்க ஆரம்பித்தன.

கடந்த மூன்றும் திகதி யாழ் மாநகரசபை அலுவலகத்திற்குள் நுழைந்து ஆணையாளரைக் கொலை செய்ய முயன்ற சம்பவத்தை அடுத்து யாழ் மாநகரசபையின் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

இச்சம்பவம் தொடர்பாக ஊழியர்கள் வெளிநடப்புச் செய்ததும் — மறியல் போராட்டம் நடத்தியதும் தெரிந்ததேயே. (இ-10)

# கல்விச் சேவையின் 3ஆம் வகுப்புக்கு
## விண்ணப்பம் கோரப்பட்டது

யாழ்ப்பாணம் அக். 14

இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் 3ஆம் வகுப்புப் பதவி உயர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்கள் அதிபர் சேவையின் தரம் I, விசேட பதவி தரம் II நிறைவேற்று வட்டாரக் கல்வி அதிகாரி ஆகிய பதவிகளில் 3 வருடத்திற்கு மேலாக சேவையாற்றுவோரிடமிருந்தே கோரப்பட்டுள்ளன.

இதற்கான கல்விச் சேவை ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் ஒன்று அண்மையில் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

இந்தச் சுற்றுநிருபத்திற்கமைய விண்ணப்பங்கள் யாவும் கல்விப்பணிப்பாளருக்கு ஊடாக கல்விச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு எதிர் வரும் 25ஆம் திகதிக்கு முன் அனுப்பப்பட வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது

இந்தப் பதவியுயர்வுக்கு வயதெல்லை எதுவும் அறிவிக்கப்படவில்லை.

செயல்திறன் பற்றிய மதிப்பீடு சேவை மூப்பு நேர்முகப் பரீட்சை என்பவற்றின் அடிப்படையிலேயே மதிப்பீடு செய்யப்பட உள்ளது.

இதேவேளை இதற்குரிய விண்ணப்படிவங்களை அந்தந்தப் பகுதி வட்டாரக் கல்வி அதிகாரிகள், கொத்தணி அதிபர்கள் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்றும்—

யாழ். மாவட்ட விண்ணப்பதாரர்கள் 20ஆம் திகதிக்கு முன்பே விண்ணப்பங்களை யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளரிடம் சேர்த்து விட வேண்டும் என்றும்— யாழ் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

## மினி சினிமா உரிமையாளர் கூட்டம்

யாழ்ப்பாணம் அக் 14

யாழ் மாவட்ட மினி சினிமா சங்கத்தின் அவசர பொதுக்கூட்டம் ஒன்று இன்றுகாலை 9-00 மணிக்கு யாழ் மணிக்கூட்டு வீதியில் உள்ள பிரஸ்தாப சங்க அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் சகல மினிசினிமாக்களினதும் உரிமையாளர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

## ஆரம்ப ஆசிரியர்:
# மூன்றாவது குழுவினருக்கு மாத இறுதியில் பயிற்சி

ஆரம்ப ஆசிரியர்களில் மூன்றும் குழுவினருக்கான சேவைக்கால முன் பயிற்சி இம் மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தகவலை கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

'ஏற்கனவே கடிதங்கள் அனுப்பப்பட்ட 30 பேர் வரையானவர்களின் பெயர்ப்பட்டியல்கள் இன்னும் எமக்கு வந்து கிடைக்கவில்லை இந்தப் பட்டியல் அடுத்த சில தினங்களில் கிடைக்கலாம் என எதிர்பார்க்கிறோம்- பட்டியல் கிடைத்ததும் இம்மாத இறுதியில் பயிற்சி ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது'' என்று அவர் கூறினார்.

இதேவேளையில் தெரிவு செய்யப்பட உள்ள கணித விஞ்ஞான ஆசிரியர்களுக்கான சேவைக்கால முன்பயிற்சியையும் இந்த மூன்றும் குழுவினருடனேயே சேர்த்து நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-9)

## ஒத்திவைப்பு

இம்மாதம் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதிவரை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்கம், பிரடறிக்ஈபேட் மன்றம் ஆகியவை இணைந்து கொழும்பு, சிலோன் இன்ஸ் ஹோட்டலில் நடத்த இருந்த கருத்தரங்கு நாட்டில் ஏற்பட்டுள்ள போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## கூட்டணி .
[1ஆம் பக்க தொடர்ச்சி)

மாகாணத் தேர்தல் ஆகியவை குறித்து இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வார் என்று தெரிய வருகிறது. (இ-ஐ)

## அரச.......
(1ஆம் பக்கதொடர்ச்சி)

தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர் சமர்ப்பிக்கும் தனியார் வைத்தியர்களிடமிருந்து பெற்று அனுப்பும் வைத்தியச் சான்றிதழ்கள் இரண்டு தினங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

முன்னைய சுற்று நிருபத்தின்படி, அரச ஊழியர்கள் லீவில் நிற்கும் காலத்துக்கு 14 நாள் வரை தனியார் வைத்தியர்களிடமிருந்து வைத்தியச் சான்றிதழ் பெற்று அனுப்ப அனுமதிக்கப்பட்டிருந்தது. (அ-எ)

## நடேஸ்வரா.......
(1ஆம் பக்க தொடர்ச்சி)

சென்றிநின்ற அமைதிப் படையினர் கல்லூரி அதிபரை அழைத்து மறியலுக்கான காரணத்தை அறிந்து உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்தனர்.

இதை அடுத்து உயர் இராணுவ அதிகாரி மறியல் நடந்த இடத்துக்கு வந்து கைதானவர்களை இவ்வாரத்துக்குள் விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாகஉறுதிமொழி தெரிவித்ததை அடுத்து மறியல் போராட்டத்தை மாணவர்கள் கைவிட்டனர்.

காங்கேசன்துறையைச் சேர்ந்த மற்றும் பல பாடசாலை மாணவர்களும் இம்மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதற்கிடையில் மாணவர்கள் கைதாவதை நிறுத்தும்படி கோரி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களும் வகுப்புக்களை பகிஷ்கரித்தனர். (இ-68)

## நாளைய சஞ்சீவியில்

- ★ பக்தி தான் நாம் தேடும் லக்ஷ்மி காஞ்சி ஸ்வாமிகள்
- ★ செவ்வாயில் பனிச்சறுக்கு விளையாட விரும்பும் விண்வெளி வீராங்கனை
- ★ பாரதியார் அருந்திய 'அமுதம்'
- ★ அஸ்தமனதில் ஓர் உதயம்-சிறுகதை
- ★ பாடம் பயில்வோம்
- ★ பச்சைப்பசேல் வயல்கள் திரைப் படங்களில் வந்தால் பாராட்டப்பட வேண்டியவர் யார்?
- ★ 'ஒரு கடிகாரம் பொருத்தம் பார்க்கிறது – நாடகம்
- ★ தமிழ் நாட்டில் ஜனாதிபதி ஆட்சி நீடிக்கப்படுமா?
- ★ 'காரம்' நிறைந்ததாக மாறிவரும் 'சிலி' நாட்டு அரசியல்-உலக-உலா
- ★ இங்கிலாந்து ரத்துச் செய்த இரண்டு கிரிக்கெட் சுற்றுலா
- ★ குத்துச் சண்டை வீரரின் மனைவி நிம்மதியாக வாழ ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயம்
- ★ மற்றும் வழமையான சுவையான அம்சங்களுடன்.

## பஸ்....
(1ம்-பக்கத்தொடர்ச்சி[

பவராவார்.

காயமடைந்தவர் தகவல் தருகையில் கூறியதாவது:-

யாழ் மின்சாரநிலைய வீதி, கூட்டுறவு சங்கக் கட்டிடத்திற்கு சமீபமாக நான்வந்துகொண்டிருந்த சமயம் எனக்கு பின்பக்கமாக துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது. ஒருவர் ஓடுவதைக் கண்டேன். யார் சுட்டது என்பது பற்றித் தெரியாது. நானும் ஓடினேன். பின்னர் தான் எனது கையிலிருந்து இரத்தம் வருவதைக் கண்டு யாழ் வைத்தியசாலைக்கு வந்தேன் என்றார். (அ-9


## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி நிர்மலாதேவி பாலசுந்தரம்**
(திரு மு. பாலசுந்தரம், நீர்ப்பாசன இலாகா, வவுனியா- அவர்களின் அன்பு மனைவி)

பிறப்பு: 15- 12- 1952
இறப்பு: 14– 10– 1987

பண்புள்ள மனைவியாய்,
பாசமுள்ள தாயாய்
அன்புள்ளம் கொண்டவளாய்
அனைவருக்கும் உதவினும்
என்றும் சிரித்த முகத்தோடு
சீராக வாழ்ந்தவள் நீ
சிறப்பெல்லாம் பெற்றிருந்தாய்!
நின் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டி நிற்கும்

'சிவகிரி'
ஊரெழு கிழக்கு
ஊரெழு

கணவர், பிள்ளைகள்,
தகப்பன், சகோதரன்,
உற்றார், உறவினர்
(7162)

# மரண அறிவித்தல்கள்

## தெய்வநாயகம் கௌரீஸ்வரன்
**[T. ஜஸ்ரின் தேவன்]**

கௌரீஸ்வரன் 12-10-88 அன்று அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை தெய்வநாயகம் திருமதி தெய்வநாயகம் இராசேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும் சுகந்தி, தேவகாந்தி, விக்னேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஞானேஸ்வரன் ?ய ।கேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 14-10-88 இன்று வெள்ளி பிற்பகல் 2-00 மணிக்கு மணியர் கோட்டம் பெனிக்கோஸ் சேமக்காலைக்குஎடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி தெய்வநாயகம்
156, செம்மணி வீதி,
நல்லூர்.
(C/598)

## திரு. C. இராமநாதன்
(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

பிறவுண் வீதியைச் சேர்ந்த திரு. செல்லப்பா இராமநாதன் (இளைப்பாறிய S S.A) அவர்கள் 13ம் திகதி வியாழக்கிழமை காலமாகிவிட்டார். இவர் அளவெட்டி காலம் சென்ற வென்றரசர் செல்லப்பா, தம்பதிகளின் மகனும் நீராவியடி வீரசிங்கம் தம்பதிகளின் மருமகனும்' வைத்தீஸ்வரா வித்தியாலய ஓய்வு பெற்ற ஆசிரியை தையல் நாயகியின் கணவனும், மைதிலி (ஆசிரியை D. S சேனநாயக்கா வித்தியாலயம், கொழும்பு) மாதினி (U. K.) ஆகியோரின் தந்தையாரும், தியாகலிங்கம், (கனடா), ரவீந்திரன், (U. K) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற அருணாசலம், கைலாயபிள்ளை, தனபாலசிங்கம் (R M. P), விசாலாட்சி, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 5 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல்மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி தை. இராமநாதன்
154, பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்
(7034)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 14- 10- 1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Friday 14th October 1988



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org